# JANAVINODINI.

# ஜநவிநோதிநி.

இல. 6.] ஜூன் மீ 1890. [புஸ்த. XXI.


CONTENTS.


Discipline of the Heart (*Continued*)........................ 121

Catechism on various subjects (*Continued*)........................ 123

The Life of a Bear, Chapter XXI........................ 130

Right goes to the right.—A story (*Continued*)........................ 135

The Characteristics of an Epic (*Continued*)........................ 139

Rules for Conversation (*Continued*)........................ 141

News and Notes........................ 143


அட்டவணை.


இதயசுத்தி (தொடர்ச்சி)............ 121

விவிதவிஷயவிளக்கவினுவிடை (தொடர்ச்சி)............ 123

ஓர் கரடியின் கதை, 21-ம் அத்தியாயம்............ 130

அவரவருரிமை அவரவரடைவர்.—ஒரு கதை (தொடர்ச்சி)............ 135

காவியலட்சணம் (தொடர்ச்சி)..... 139

சம்பாஷணையைப்பற்றிய விதிகள் (தொடர்ச்சி)............ 141

வர்த்தமானக் குறிப்புகள்............ 143



MADRAS.

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

OLD COLLEGE, NUNGUMBAKAM.

# ஜநவிநோதிநி.

இல. 6.] ஜூன் மீ 1890. [புஸ்த. XXI.


## இதயசுத்தி.

(தொடர்ச்சி)

இதயசுத்திக்கு முக்கிய சாதனங்களாயுள்ள பலவற்றுள்ளும் சிறந்ததாயிருக்கும் மனச்சாட்சியைக் குறித்துச் சென்றசஞ்சிகையில் சில விஷயங்களைச் சொல்லிமுடித்தோம். இன்னும் சிலவற்றை ஈண்டெழுதுகிறோம்:—

உலகத்தில் மனச்சந்துஷ்டியையெதார்த்தத்தில் அடையவிரும்பும் ஒவ்வொருவனும் தன்மனச்சாட்சி தனக்கு அவ்வவ்வமயங்களில் கூறும் புத்திமதிகளை நிக்கிரகிக்காமல் அதை அநுசரித்தொழுகவேண்டுவது அவசியமென்று கூறினோம். ஒருவன் கல்வி-செல்வம்-ஒழுக்கம் முதலியவற்றில் மிகச் சிறந்தவனாயிருக்குங் காரணத்தினாலே பிறரால் புறத்தே எவ்வளவு விசேஷமாகப் புகழப்பட்டபோதினும் அதனாலுண்டாகும் மகிழ்ச்சியனைத்தும்--மனச்சாட்சி அகத்தே புகழ்வதனாலுண்டாகும் மகிழ்ச்சிக்கு எவ்வளவும் நிகராகாது. இக்கருத்தையமைத்தே,

"நெஞ்சத்து
நல்லம்யாமென்னுநடுவுநிலைமையாற்
கல்வியழகேயழகு"

என மேலோர் கூறியிருக்கின்றனர். கல்வியினால் ஒருவனுக்கு விளையத்தக்க எல்லாப் பயன்களினும் "நெஞ்சத்து நல்லம் யாமென்னு நடுவுநிலைமை." ஒன்றே சிறந்தது. அரிதாகிய இக்குணம் இராவிடில் ஒருவன் எவ்வளவு கல்விகற்றபோதினும் அவன் கல்லாதவனேயாவான்.

மனச்சாட்சியின் பெருமை இப்படிப்பட்டதாயிருக்கக் கல்விமான்களென்று வெளிவரும் அனேகர் பரோபகாரார்த்தமாகச்சேரும் சிலசபைகளிலேதத்தம் கருத்தை வெளியிடவேண்டிய அவசியம்நேரிடும்போது, இன்னதுசொன்னால் இன்னாருக்கு விருப்பமாயிருக்கும், இன்னாருக்கு அருவருப்பைத்தரும் என்று எண்ணத்தகாதனவற்றையெல்லாம் எண்ணிமனச்சாட்சிக்கு விரோதமாக அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் வேறுவகையிலே எவ்வளவு ச

த்திய கீர்த்திகளெனப் பெயர்பெற்றபோதினும் தர்மதேவதையின் சந்நிதானத்தில் பெரும் பொய்யர்களேயாவர். "நெஞ்சை யொளித் தொரு வஞ்சகமில்லை." என்று ஔவையார் கூறிய அமுதவசனத் தை அவர்கள் சிந்திக்கின்றிலர்போலும்! உலகத்தார்க்குப் பெரும் பயன்களைத்தேடித் தந்தவர்களாகிய கோலம்பஸ் - கலிலியோ முதலிய ஐரோப்பிய சுசிலர்களும், ஹரிச்சந்திரன் முதலிய நம்தேசத்துப் பூர்விகபுருஷரத்தினங்களும் தம் உடல் பொருள் ஆவி இவற்றையும்ஒரு பொருளென மதியாமல் மனச்சாட்சியின் ஆணைவழியே நின்றார்களல்லவோ? அவர்களவ்வாறு நின்ற காரணத்தினாலன்றோ இப்போதும் அழியாப் புகழுடம்பு பெற்றிருக்கின்றனர்?

பிறருடைய விருப்பு வெறுப்பை நாடாமல் நடுவுநிலைமையுடனிருந்து ஒருவன் ஒருசபையில் தன் கருத்தை வெளியிடுவானாகில் அதனால் யாருடைய சுயப்பிரயோசனத்திற்குக் கெடுதி நேரிடுகிறதோ அவர்கள் உடனே அவனை அருவருத்து அவனிடத்தில் தீராப் பகைமை பாராட்டுகிறார்கள். இது கேவலம் கீழ்மக்களுடைய இயல்பு. இத்துர்க்குணங்களெல்லாம் நம்மிடத்திராதபடி மனச்சாட்சிக்கு ஏற்க நடந்துவருவதே கடவுளுக்குப் பிரீதியாகிய இதய சுத்தியைப் பெறுவதற்கு முக்கிய சாதனமாகும்.

இரண்டாவது —எவ்வெவ்விடத்தில் எந்தெந்தச் சமயங்களிலே மனதில் துர் எண்ணங்கள் உண்டாவதற் கிடமிருக்குமோ அவ்வவ் விடத்திற்கு அந்தந்தச் சமயங்களில் போகாதிருப்பதே உத்தமம். இதுவும் ஒருவன் இதயசுத்தி பெறுவதற்கு முக்கியமான சாதனமாகும். மனதை அலக்கழிக்கத்தக்க விஷயங்களிராத இடத்திலொருவனிருந்து மனதைப் புனிதமாய் வைத்துக்கொண்டிருப்பதனால் அவன் எதார்த்தத்தில் புனிதனாகானென்றும், மனதைக் கலக்கத்தக்க பற்பல விஷயங்களுள்ளவிடத்தில் ஒருவனிருந்து அம்மனதைக் கலங்காவகை திடசித்தனாயிருப்பதனாலேயே புனிதனாவானென்றும் சில மதவாதிகள் கூறுவர். மனதைக் கவரத்தக்க விஷயங்களிருக்கும் இடத்திற்குப்போய் அம்மனங் கலங்காமல்மீளுவதுபெரும்பான்மையோர்க்கு அருமையான காரியமென்பதே எமது கொள்கை. பெரும் புண்ணிய விசேஷத்தினாலே மிகச்சிறுபான்மையோர் மாத்திரம் இயற்கையிலேயே மனத்திட்பம்அமையப்பெற்றுத் துர்எண்ணங்களினாலே அது கலங்காவகை தப்பித்துக் கொள்ளுதல்கூடும். மனதிற்குள் பிரவேசிக்கும்சகல துர்எண்ணங்களுக்கும் மெய்-வாய்-கண் -மூக்கு- செவி என்னும் ஐம்புலன்களே வாயில்களாயிருக்கின்றன. அவ்வாயில்களுக்குள்ளே எவை எவை எவ்வளவு எவ்வளவு மட்டில் திறவாமல் மூடப்பட்டிருக்கின்றனவோ அவ்வவற்றின் மூலமாக அந்தந்தமட்டிலே துர் எண்ணங்கள் மனதிற் புகாமலிருக்கும். இதனால் நமது புலன்களை நாம் உபயோகிக்காமல் பாழாக்கவேண்டுமென்பதல்ல நம் கருத்து. ஆனால் அவற்றை எவ்விடத்தில் உபயோகிப்போமாகில் து

ர்எண்ணங்கள் உள்ளே புகுமோ அவ்விடத்தில் மாத்திரம் உபயோகிக்காம லிருக்கவேண்டுமென்பதே நம் கொள்கை.

> "யாதனின்யாதனினீங்கியானோத
> லதனினதனினிலன்."

என்னுந் திருக்குறளும் இவ்விஷயத்தை வற்புறுத்துவதற்காகவே கூறப்பட்டது.

மூன்றாவது.—தனியே யிருக்கும்போது ஒவ்வொருவரும் தாம் அன்றாடம்செய்த செய்கைகளைப்பற்றியும் கொண்ட எண்ணங்களைப்பற்றியும் சிறிது நேரமாவது நடுவுநிலைமையுடன் யோசிக்கவேண்டும். இதுவும் இதயசுத்திக்கு முக்கியகாரணம். எப்படிப்பட்டவனாயிருக்கினும் அவன் எண்ணும் எண்ணங்களிலும் செய்யும் செய்கைகளிலும் பேசும் பேச்சுகளிலும் ஏதேனும் பிழையிராமற்போகாது. அவ்வாறு பிழையிருத்தல் மானிடஇயல்பேயாகும். ஆனால் ஒவ்வொருவனும் கூடியவரையில் மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் தனக்கேனும் பிறர்க்கேனும் தீமை நேரிடாதபடி நாளாவர்த்தியில் பிழைகளை நீக்கிக்கொண்டுவர முயலவேண்டும். அன்றாடம் நம் செய்கைகளைப்பற்றி நாம் சிறிதுநேரமாவது தனியேயிருந்து சிந்தித்துப் பார்த்தாலன்றி அப்பிழைகள் நமக்கு நன்றாய்ப்புலப்படா. நம்முடையபிழைகள் நமக்கெப்போது புலப்படுகின்றனவோ அப்போதே அவைகளைப்போன்ற பிழைகள் பிறரிடத்தே காணும்போது அவற்றிற்காக நாம்கோபிக்க இடமிராது. ஆகையால் தனியேயிருந்து நடுவுநிலைமையோடு நம் செய்கைகளை ஆய்ந்துபார்ப்பதும் இதயசுத்திக்கு முக்கிய சாதகமாகும்.

மேலே கூறியசாதனங்களைக்கொண்டு இதயத்தைச்சுத்திசெய்பவர்கள் இகபரபோகபாக்கியங்களை அடையப் பெறுவார்கள்.

## விவிதவிஷயவிளக்க வினாவிடை.

(தொடர்ச்சி.)

18. சீடன்.—ஐயா! நேற்று நான் மழையைக்குறித்துச் சிலவிஷயங்களைக்கேட்டுத்தெளிந்தேன். அவைகளைக்குறித்துப் பிறகு சிந்தித்துக்கொண்டிருந்தபோது இன்னும் இரண்டொரு சந்தேகங்கள் தோன்றின. அவைகளையுங்கேட்டுத்தெளியவிரும்புகிறேன். மழைத்துளிகள் கோளரூபமாக (திரண்டுருண்டு) ஏனிருக்கவேண்டும்?

ஆசிரியர்.—நேற்று நாம் வசனித்துக்கொண்டிருந்தபோது பதின்மூன்றாவது வினாவுக்கு யான் கூறிய விடையைச் சிறிது ஞாபகப்படுத்திக்கொள்க. ஒவ்வொரு பதார்த்தத்தின் அணுவுக்கும் மற்றொரு

பதார்த்தத்தின் அணுவைத்தன்னிடத்தில் இழுத்துக்கொள்ளும் சக்தி இயற்கையிலிருக்கிறதென்று யான் சொன்னேனல்லவா? அதுபோலவே ஒவ்வொரு நீரணுவும் மற்றொருஅணுவோடுசேர்ந்து ஐக்கியமாகத்தக்க இயல்பு அதற்கிருக்கிறது. இவ்வாறே ஒவ்வொருபதார்த்தத்தின் அணுக்கள்யாவும் ஒன்றோடொன்று நெருங்கி இசைந்துசேரும் தன்மைபெற்றிருக்கின்றன. இந்தச்சக்திக்குப் பிண்டீகரணசக்தியென்று சாஸ்திரிகள் பெயரிட்டிருக்கிறார்கள். இந்தச் சக்திகாரணமாக ஜல அணுத்திரள்கள் ஒன்றோடொன்று ஐக்கியப்படுவதற்காக அதிவிரைவாய்க்கூடும்போது அவை விர்த்தாகாரவடிவு பெறுகின்றன. நீர்மயமான வஸ்துக்களின் அணுத்திரள்கள் பூமியில் வந்துவிழுவதற்குமுன்னே பிண்டீகரணசக்தியினால் கோளவடிவுபெறுகின்றன என்னும் விஷயத்தையறிந்தே, குண்டு வார்ப்படம்செய்வோர் கோபுரம்போன்ற ஒரு உன்னதமான கட்டடத்தைக்கட்டி அதன் உச்சியிலிருந்து உட்புறமாகச் சொட்டுச்சொட்டென்று ஒழுகும்படி ஈயம்முதலிய உலோகங்களை உருக்கி வார்க்கிறார்கள். அந்நீர்மயமான உலோகம் மேலகன்று அடிமிகவும் சிறுத்திருக்கும்பாத்திரத்தில் வார்க்கப்பட்டவுடனே அது அவ்வடித்துவாரத்தின் வழியாகத் துளித்துளியாய்க் கீழேவிழும்போது அப்பாத்திரத்தின்முனையில் முன்னே உருண்டையாயமைந்து பிறகு இறுகிக்கடினமாகிக் குண்டுகள் ரூபம்பெறுகின்றது. குண்டுவார்ப்படம்செய்வோர் இந்தயுக்தியைக்கண்டுபிடித்தது ஈஸ்வர சிருஷ்டியிலே நீர்த்துளிகள் கீழே விழுவதற்குமுன் உருண்டையாயமையுந் தன்மையைப்பார்த்ததனாலேயாம். இவ்வாறே மனிதர்கள் உண்டாக்கும் ஒவ்வொருதந்திரமும் ஈஸ்வரசிருஷ்டியிலே இயற்கையில் அமைந்துள்ள விசித்திரத்தையறிந்ததனாலேதான். பூதக்கண்ணாடி, தூரதிருஷ்டிக்கண்ணாடி முதலியவற்றைக் கண்டுபிடித்ததும் இயற்கையில்நமக்கு ஈஸ்வரனால் அமைக்கப்பட்டுள்ள கண்களின் உருவமைதியைக் கண்டுதெளிந்ததனாலேயாம்.

19. கே.—மழைத்தண்ணீர் மற்றெல்லாத்தண்ணீரைவிடச் சுத்தமானதா?

ஆ.—ஆம். நமக்குக்கிடைக்கக்கூடிய தண்ணீர் யாவற்றுள்ளும் மழைத்தண்ணீர் அதிகசுத்தமானதுதான். ஏனெனில், பூமியிலுள்ள நீர்நிலைகளினின்றும் ஜலத்திரள்கள் ஆவியாய் மேலே போகும்போது அந்தஜலத்திலுள்ள அசுத்தங்களையெல்லாம் அந்நீர்நிலைகளிலேயே தங்கவிட்டுப்போகின்றன. இவ்வாறு மேலே ஆவியாயெழும்பும் நீர்த்திரள் எங்கும் எக்காலத்தும் உவர்முதலிய அசுத்தங்கள் நீங்கிச் சுத்த ஜலமாயிருப்பதையே நாம் காண்கிறோம். சமுத்திரத்திலுள்ள ஜலம் ஆவியாய் மேலெழும்பும்போது அதனிடத்துள்ள உவர்முதலிய அசுத்தங்கள் கூடப்போவதில்லை. அவ்வாறுபோகுமானால் மழைத்தண்ணீர் உப்புத்தண்ணீராகவல்லவோ இருக்கவேண்

டும்? மழைத்தண்ணீர் சற்றேறக்குறையச் சுத்தமாயிருக்கிறபடியினால்தான் அது கீழேவரும்போது இடையிலுள்ள ஆகாயத்திலும் நிச்சலவாயுவிலுமிருக்கும் பற்பல அசுத்தங்களையெல்லாம்போக்கிச் சகலஜீவராசிகளுக்கும் நன்மையைவிளைக்கின்றது.

20. சி.—பூமியிலுள்ள நீர்நிலைகளிலிருக்கும் ஜலம் நாளாவர்த்தியில் ஜீவராசிகளால் அசுத்தமாய்விடுகிறதல்லவா? அந்தஅசுத்தம் போவதுதானெப்படி?

ஆ.—அப்படிப்பட்ட அசுத்தங்களைப்போக்கி ஜலத்தைச் சுத்தப்படுத்துவதற்காகத்தான் ஜகதீசர் அளவிறந்த மச்சம் முதலிய நீர்வாழும் ஜந்துக்களை உண்டாக்கியிருக்கின்றனர். அவைகள் அசுத்தமான பதார்த்தங்களை ஆகாரமாகக்கொண்டு ஜலத்தைச் சுத்திசெய்துவிடுகின்றன. இவ்வாறே நமக்குப்பிராணாதாரமாயுள்ள நிச்சலவாயுவிலிருக்கும் நுண்ணிய அசுத்தமான பதார்த்தங்களையெல்லாம் ஆகாரமாகக் கொள்ளும்படி ஈ,கொசுமுதலிய சிறுஜந்துக்களைப்படைத்தும், அவற்றை ஆகாரமாகக்கொண்டு மாய்க்கும்படி பல்லி-தூரிஞ்சில்-சிலந்திமுதலிய பிராணிகளைப்படைத்தும் கடவுள் நாம்உஸ்வாச நிஸ்வாசம்செய்யும் நிச்சலவாயுவைச் சுத்தப்படுத்தி வைக்கின்றனர்.

21. சி.—ஐயா! நேற்று நான் தங்களை நிச்சலவாயுவின் லட்சணத்தைப்பற்றி வினவியபோது, வாயு எங்குமுள்ளபொருளென்றும், அது அலைமோதி இடம்விட்டுப்பெயருகையில் அதற்குக் காற்றெனப்பெயரென்றும், அது இயக்கமற்றிருக்கும்போது அதற்குநிச்சலவாயுவெனப்பெயரென்றும், அது நமக்குப் பிராணாதாரமாயுள்ளதென்றும் தாங்கள் விடையளித்தீர்கள். அது நம்முடைய உயிர்வாழ்க்கைக்குஇன்றியமையாததாயிருக்கிறபடியால் அதன் குணத்தைப்பற்றி இன்னும் விரிவாயறிய வேணவாவுடையேன். நிச்சலவாயு பூமியின் அடிமட்டத்தினின்றும் எவ்வளவுதூரம்வரையில் ஆகாயத்திற்பரவியிருக்கிறது?

ஆ.—அது நிலமட்டத்தினின்றும் நாற்பது மைல் உயரத்திற்குக்குறையாமலும் ஐம்பதுமைல் உயரத்திற்குமேற்படாமலும் பூமிமுழுவதும் சூழ்ந்து வியாபித்துக்கொண்டிருக்கிறது.

22. சி.—அந்த உயரத்திற்குமேல் நிச்சலவாயு இல்லையென்று நாம் அறிந்துகொள்வதெப்படி?

ஆ.— நிச்சலவாயு நிலமட்டத்திலே செறிவாயும் அடர்த்தியாயும் தடித்துக்கனப்பாயுமிருந்து உயரப்போகப்போக உயரத்திற்கேற்றபடி நெருக்கமற்றதாகவும், நுண்ணியதாகவுமாய்விடுகிறது. உயர்ந்தமலைகளின்மேல் ஏறிப்போவோருக்கும்,புகைக்கூடில் பறந்து ஆகாயமார்க்கமாய்ச் செல்வோருக்கும்இவ்வித்தியாசம் நன்றாய்ப்புலப்படும். ஜலத்திலே ஆழமாய்ப்போகப்போக மீன்கள் எவ்வளவு சௌக்கியமாய்ச் சஞ்சரிக்கின்றனவோ அவ்வளவு சௌக்கியமாகவே நாமும் நிச்சலவாயு அடர்ந்துதடித்துள்ள நிலமட்டத்திலே ஜீவிக்கலாம். நாம் உஸ்வாச நிஸ்வாசஞ் செய்வதற்கு வேண்டியவரையில் நிச்ச

லவாயு அடர்ந்துகனத்திருந்தால்தான் நமக்குச்சௌக்கியமாயிருக்கு
ம்.மேலே போகப்போக நிச்சலவாயு அடர்த்தியற்றதாகவும் நுண்ணி
யதாகவும் ஆய்விடுகிறதை நேரில்சிலர்கண்டபடியால் ஐம்பதுமைல்
உயரத்திற்கப்புறம் கேவலம் நிச்சலவாயு மனுஷ்ய சஞ்சாரத்திற்கு
வேண்டிய அளவுக்குஇல்லையென்றே யூகிக்கவேண்டியதாயிருக்கிறது.

23. சி.—ஆகாயத்தில் உயரமாகச்சென்று இந்தவாயுவின் லட்
சணத்தைப் பிரத்தியட்சமாகக்கண்ட சிலருடைய அநுபவம் யாது?

ஆ.—1804-௵ (M. Gay. Lussac) மான்ஷியர். கே. லஸ்ஸக். எ
ன்பவர் 23,000 அடி மேலேபோனார். 18,000 அடிஉயரத்தில் அவர்
போனபோது நிலமட்டத்திலிருந்ததைவிட நிச்சலவாயுஅங்கேகனத்
தில் பாதியளவுதானிருந்ததென்று (Barometer) அனிலபாரகி என்னு
ம் வாயுகனஅளவைக்கருவியால் கண்டறிந்தனர். ஆகவே,நிச்சலவாயு
36,000அடிஉயரத்தில் நிலமட்டத்திலிருப்பதைவிடக்காற்பங்கு அள
வுதானிருக்கவேண்டுமென்றும்,54,000 அடிஉயரத்தில்அரைக்காலப
ங்கு அளவுதானிருக்கவேண்டுமென்றும் கணக்கேற்படுகிறது. இவ்வா
றுநிச்சலவாயு கனத்தில் குறுகி நுண்ணியதாய்க் கொண்டேபோகப்
போகச்சூரியகிரணத்தினாலுண்டாகும்வெளிச்சமும்ஓசையும்உஷ்ண
மும் குறைந்துகொண்டேபோகின்றன. பட்டப்பகலிலேயே உயரப்
போகப்போக ஆகாயம் இருண்டுகறுத்துத் தோன்றுகிறதென்றும்,
மூச்சு தெணறிவிடுகிறதென்றும், நெடுந்தூரம் உயரமாகச்சென்றவர்
கள் சொல்லுகிறார்கள். ஐம்பது அறுபது மைல் உயரத்திற்குப் போ
கும்பட்சத்தில் சூரியகிரணம் அவ்விடத்தையூடுருவியே பூமிக்குவரு
வதாயிருக்கினும் நிச்சலவாயுவற்ற அவ்விடத்திலே முற்றும் அக்கிர
ணங்களெவ்வளவுந் தோன்றாமல் இருளாகத்தானிருக்கும். இதனால்
வெளிச்சத்திற்கும் ஓசைக்குங்கூட நிச்சலவாயு அத்தியாவசியமென்
று தெரியவருகிறது. ப்ளான்க் என்னும் பர்வத சிகரத்தில் யாத்திரை
செய்வோர் துப்பாக்கி சுட்டால்நிச்சலவாயு குறைந்திருப்பதனாலே அ
ங்கு ஓசைகேட்பதில்லை என்கிறார்கள்.மேற்படி கே. லஸ்ஸக்என்பவர்
23,000 அடி உயரத்திற்சென்றபோது உஸ்வாச நிஸ்வாசம் செய்யத்
தமக்குமிகவும் பிரயாசையாயிருந்ததென்றும், தம்முடைய செவிக
ளின் ஜவ்வுகள் வெடித்துப்போவது போலிருந்தனவென்றும் கூறுகி
றார். பெரு என்னும் தேசத்திலிருக்கும் சில உயர்ந்த பர்வதங்களின்
மேல் ஏறிச்சென்ற ஒரு சாஸ்திரியார்தம்முடைய உதடுகளெல்லாம்
வெடித்துப் போயினவென்றும், கண்ணிமைகளிலிருந்து உதிரம் பிர
வாகம்போல் பெருகியதென்றும் கூறுகிறார்.

24. சி.—நிச்சலவாயு சுமார் ஐம்பதுமைல் உயரத்திற்குப்பூமி
யைச் சூழ்ந்திருக்கிறபடியால் அதுஇப்பூமியை அமுத்தும்அளவிற்கு
ஏதாவது பிரமாணம் ஏற்பட்டிருக்கிறதா?

ஆ.—ஆம், கணக்கேற்பட்டிருக்கிறது. நிலமட்டத்திலே ஒரு சதுர அங்குல இடத்தில் 15 பவுன் எடை அளவுக்கு நிச்சலவாயு பூமியை அழுத்திக்கொண்டிருக்கிறது.

25. சி.—பூமியைச் சூழ்ந்துள்ள நிச்சலவாயு தாங்கள் முன்னே சொல்லிய கணக்குப்படி பூமி முழுவதையும் அழுத்திக்கொண்டிருக்கும் அளவுக்கு ஒரு பிரமாணம் ஏற்பட்டிருக்கிறதா?

ஆ.—ஆம், பிரமாணம் ஏற்பட்டிருக்கிறது. அறுபதுமைல் குறுக்களவுள்ள ஒரு பெரும் ஈயக்குண்டை நிறுத்தால் அது எவ்வளவு பளுவிருக்குமோ அவ்வளவு பளுவுடன் நிச்சலவாயு இப்பூமியை நாற்புறமும் அழுத்திக்கொண்டிருக்கிறது.

26. சி.—தங்களுடைய கணக்கின்படி சராசரியில் மனிதர்களாகிய நம்முடையதேகத்தை நாற்புறமும் நிச்சலவாயு அழுத்திக்கொண்டிருக்கும் அளவுக்கு ஒருகணக்கேற்பட்டிருக்கிறதா ?

ஆ.—சராசரியில் மனிதனுடையதேகம் 15 சதுர அடிகொண்டதாக வைத்துக்கொள்வோமானால் சற்றேறக்குறைய 14½ டன் எடை எவ்வளவோ அவ்வளவுபளுவுடன் நம்மை நிச்சலவாயு அழுத்துகிறதென்றுசொல்லலாம்.

27. சி.—இவ்வாறு நாற்புறமும் நம்மைநிச்சலவாயு அழுத்திக்கொண்டிருப்பதனால் நமக்குண்டாகும் பயன் யாது ?

ஆ.—இவ்வாறு அது அழுத்திக்கொண்டிராவிட்டால் நம்முடையதேகத்தின் உதிரம்-தசை-நிணம்முதலிய உறுப்புக்கள்கட்டமைதி பெறாமல் நிலைகுலைந்து சிதறுண்டுபோகும். உயரமாகயாத்திரைசெய்த சிலர்பட்ட அவஸ்தையைப்பற்றி முன்னமே சொல்லியிருக்கிறேனல்லவா ?

28. சி.—நிச்சலவாயு நாற்புறமும் நம்மைச் சூழ்ந்து அழுத்திக்கொண்டிருப்பதை நாம் ஏன் உணருவதில்லை ?

ஆ.—அது ஏதேனும் ஒருபுறமாகவிருந்து நம்மைஅழுத்திக்கொண்டிருக்குமாயின் நாம் அதை உணருவதற்கிடமிருக்கும். அது எல்லாப்பக்கங்களிலும் உள்ளும் புறம்புமாக நம்முடைய தேகத்தின் ஒவ்வொரு அணுவோடுங்கலந்து வியாபித்திருக்கிறபடியால் நாம் அதைப் பிரித்தறியக்கூடவில்லை.

29. சி.—நிச்சலவாயு பூமியிலுள்ள பொருள்களை நாற்புறமும் அழுத்திக்கொண்டிருக்கிறதென்பதற்குச் சிலபிரமாணங்கூறவேண்டும்.

ஆ.—ஒருபாத்திரத்தில் தண்ணீர் பூர்த்தியாய்நிரப்பிஉள்ளேகாற்று சற்றும்புகாதபடி ஒருகாகிதத்தைமேலேவைத்து அப்பாத்திரத்தைத் தலைகீழாகக்கவிழ்த்துப் பிடிப்போமாயின் அந்தத்தண்ணீர் கீழேவிழாதபடி அச்சிறுகாகிதம் அப்பாத்திரத்தின்வாயண்டை தாங்கிக்கொண்டிருக்கும். அக்காகிதத்திற்கும் பாத்திரத்தின் வாய்க்கும்

இடையில்காற்றுபுகுமானால் அத்தண்ணீரும் காகிதமும் கீழேவிழுந்துவிடும். இதற்குக்காரணம்யாது? அப்பாத்திரத்தில் தண்ணீரைநிரப்பி அதைத்தலைகீழாகக்கவிழ்க்கும்போது வெளியேயுள்ளநிச்சலவாயு அக்காகிதத்தைவிழவொட்டாதபடி அழுத்தித்தாங்கிக்கொண்டிருக்கிறது. அப்பாத்திரத்திலுள்ளஜலமும் காகிதமும்எவ்வளவுபளுவோ அதைவிடஅதிக அளவுக்குவெளியேயுள்ள நிச்சலவாயுஅக்காகிதத்தையும் ஜலத்தையும் அழுத்திக்கொண்டிருப்பதே அவ்விசித்திரத்திற்குக்காரணம். ஈ, பல்லி, எலி, ஓணான், பற்பலபூச்சிகள், கிருமிகள் முதலியபிராணிகள் அதிகவழுவழுப்பாயுள்ள சுவர்களின்மேலும் கூரையின்உட்புறமாகவும் நடந்துபோவதற்குக் காரணம்யாது? அந்தப் பிராணிகள் சுவர் கூரை முதலியவற்றில் அங்கங்குள்ள நுண்ணிய பொருள்களைப்பற்றிக்கொண்டு போகின்றனவென்று சாமானிய ஜனங்கள்கூறுவார்கள். அதுபிழை. ஏனெனில், மிகவும்வழுவழுப்பாயும் பற்றிக்கொள்வதற்கு எவ்வளவும் ஆதாரவற்றதாயுமுள்ள கண்ணாடிமுதலியபொருள்களின்மேலும் அந்தப்பிராணிகள் அதிவேகமாய்க் கீழேவிழாதபடி மேலுங்கீழுமாகவாவது கீழும்மேலுமாகவாவது பக்கமாகவாவது சுலபமாய்ப்போகின்றன. அந்தப் பிராணிகள் தம்முடைய கால்களுக்கும் அந்தச்சுவர் கூரைமுதலியபொருள்களுக்கும் இடையே எவ்வளவும் நிச்சலவாயு இராதபடி தம்முடையகால்களை அழுத்திப்பதியவைக்கும் சக்திஅமையப்பெற்றிருக்கின்றன. அப்பிராணிகளின் கால்களுக்கும் அவைபற்றும்பொருள்களுக்கும் இடையே சற்றும் நிச்சலவாயு இராதபடியால் வெளியேயுள்ள நிச்சலவாயு அப்பிராணிகளை அழுத்தித்தாங்கிக்கொண்டிருக்கின்றன.

30. சி.—சாஸ்திர ஆராய்ச்சிசெய்தபண்டிதர்கள்யாராவது இவ்விஷயத்தைப்பிரத்தியட்சமாகக்கண்டறிந்தார்களா?

ஆ.—(Mr. Sands.) ஸான்ட்ஸ் என்பவர் சிலவருடங்களுக்குமுன்னேவழுவழுப்பான ஓர்சுவரின்மேலும் கூரையின்கீழ்ப்புறமாகவும் பல்லியைப்போலவும் எலியைப்போலவும் அநேகர்பார்த்து வியக்கச் சரசரவென்று நடந்துகாட்டினார். அவர்தம்முடைய இரண்டுகால்களுக்கும் கைகளுக்கும் பெரியவட்டமான நனைந்ததோல்களைமாட்டிக்கொண்டார். அந்தத்தோல்களுக்கும் தாம்பற்றிய சுவர் முதலியபொருள்களுக்கும் இடையே நிச்சலவாயு சற்றுமிராதபடி அவர்உபாயம் செய்துகொண்டார். வெளியேயிருந்த நிச்சலவாயுவே அவரைக் கீழேவிழாதபடி தாங்கிக்கொண்டிருந்தது.

31. சி.—நிச்சலவாயுவைப்பற்றித்தாங்கள் இதுவரையில் சொல்லிக்கொண்டுவந்த விஷயத்தைச் சித்தசமாதானத்துடன் யோசித்து இன்னும் ஏதேனும் சந்தேகங்களிருக்குமாயின் நாளையதினம் கேட்கிறேன். சிலபிராணிகளின் வழக்கங்களைக்குறித்துஇரண்டொருசந்தேகங்களைக்கேட்டுத்தெளிந்து இன்றுசம்பாஷணையை முடிப்போம். தூக்கணங்குருவிமுதலிய பட்சிகள் ஆகாரம்தேடுகையில் உயரமாய்ப்ப

றந்துபோகாமல் சிலசமயங்களிலே நிலத்திற்குச் சமீபமாகவே பறந்துகொண்டிருக்கின்றன. அதனால் நாம் அறிந்துகொள்வதுயாது?

ஆ.—அதனால் மழைசீக்கிரம்வருமென்று நாம் அறிந்துகொள்ளலாம். எப்படியெனில், நிலத்திற்கு மிகவும் மேற்புறமாயுள்ளநிச்சலவாயுகுளிர்ந்து கனத்திருக்கிறபடியால் அந்தப்பட்சிகள் தேடிச்செல்லும் ஆகாரங்களாகிய பற்பல சிறு ஜந்துக்கள் மேலேயுள்ள சீதளத்வைதத்தாங்காமல் நிலத்திற்குச் சமீபமாய் இறங்கிவிடுகின்றன. ஆகையால் தூக்கணங்குருவிமுதலிய பெரியபட்சிகள் நிலமட்டத்திலேயே ஆகாரத்திற்காக வட்டமிட்டுக்கொண்டிருக்கின்றன. மேலே நிச்சலவாயு குளிர்ந்து கனக்கும்போது கீழேயிருக்கும் உஷ்ணமானவாயுதாக்கிய மாத்திரத்தில் அது இறுகவே மழைபெய்யவேண்டியதுதானே.

32. சி.—சிலந்திகள் சில சமயங்களிலே தாம் அருமையாகக்கட்டிய வலைகளையெல்லாம் பாபரவென்று தாமே அழித்துவிடுகின்றன. அது எதன்குறி?

ஆ.—இதுவும் மழைக்கு அறிகுறியே. மழைபெய்யும்போது ஈமுதலிய சிறு ஜந்துக்கள் வெளியேவந்து தம்முடைய வலையில் சிக்கிக்கொள்ளி மாட்டாவென்றும், மழைத்தண்ணீரினால் வலைகள்வீணாகெட்டுப்போய்விடுமென்றும் சிலந்திகள் ஓர்வகை இயற்கையுணர்ச்சியினால் முன்னேதெரிந்துகொண்டு தம்முடைய வலைகளை அழித்துவிடுகின்றன.

33. சி.—சிலந்தி முதலிய அற்பப்பிராணிகளுக்கு மாத்திரம் வாயுவின் சீதோஷ்ணநிலைமை வேறுபடுவது முதலிய பேதங்கள் முன்னே எப்படி தெரிகின்றன?

ஆ.—என்னென்னவிதமான வேறுபாடுதிடீரென்றுநேரிட்டபோதினும் விவேகமும் காசாணுதி அவயவங்களும் அமைப்பெற்ற நாம் மாத்திரம் சந்தர்ப்பத்திற் கேற்றபடி தப்பிப்பிழைக்கலாம். எல்லாவிதத்திலும்அற்பப்பிராணிகளாயுள்ள அந்த ஜந்துக்களுக்குஇப்படிப்பட்ட விஷயங்களிலே ஜகதீசர் எதிர்காலஉணர்ச்சியைத் தந்திராவிட்டால் அவைகள் மாய்ந்தேபோய்விடுமல்லவா? ஆகையால் அவைகளுக்கு இப்படிப்பட்டபேதங்களை யறியத்தக்க இயற்கையுணர்ச்சியை உலகநாயகர் தந்தருளினார்.

34. சி.—தேனீக்கள் தம்கூட்டைவிட்டு நெடுந்தூரம் காடுகளிற்சென்றுசஞ்சரிக்குமானால்அதனாலே நாம் தெரிந்துகொள்வது யாது?

ஆ.—நெடுந்தூரம் சென்று திரிந்து திரும்புகிறவரையில் மழைக்கு ஆஸ்பதமில்லையென்று தெரிந்துகொள்ளும் சக்தி அவைகளுக்குண்டு. ஆகையால் மழை சீக்கிரம்வராதென்று நாம் அறிந்துகொள்ளலாம்.

35. சி.—கொம்புள்ள ஜந்துக்களுக்குக் கொம்புகள் தற்காப்புக்காக ஈஸ்வரனால் அமைக்கப்பட்டிருக்க ஆடு மாடு முதலியவைகள் பிறக்கும்போதே கொம்புடன் வரும்படி ஏன் ஈஸ்வரன் அமைப்பதில்லை?

ஆ.—ஏனெனில், பிறக்கும்போதே அவைகளுக்குக் கொம்பிருக்குமானால் அவைகள் பால்குடிப்பதற்காகத் தாய்முலையைப்பற்றி இழுக்கும்போது தாயின்வயிறுகிழிந்துபோகும். தாயின்முலைப்பால் அவசியமிராமல் குட்டிகள் பெரிதாகித்தாமே தழை முதலியவற்றைத் தின்னத் தலைப்படும்போது கொம்புகள் முளைக்கின்றன. பிறக்கும்போதே நமக்கு எல்லா அங்கங்களும் அமைந்திருக்கப்பல்மாத்திரம் முளையாதிருப்பதற்குங் காரணம் இதுதான். பல் இருக்குமானால் நாம்குழந்தைப்பருவத்தில் பாலருந்தும்போது தாய்க்குமிகவும் வேதனையுண்டாகுமல்லவா ?

36. கே.—பிராணிகளைத் தேடிக்கொன்றுதின்னும் துஷ்டமிருகங்களாகிய புலி-கோனாய்-சிங்கம் முதலிய ஜந்துக்களுக்கு வெளிப்புறமாக முன்பக்கமாய்க் காது ஏன் தொங்கிக்கொண்டிருக்கவேண்டும்?

ஆ.—ஏனெனில், அவைகள் ஆகாரந்தேடிச் செல்லுகையில் தூரத்திலுள்ளபிராணிகளின் அரவம்அவற்றின்காதில்இலேசாய்நுழைவதற்காகச்செவிகள் அவ்வாறமைக்கப்பட்டிருக்கின்றன. தமக்குமுன்னே கேட்கும் சப்தத்தை முன்பக்கமாக வளைந்தகாது தூரத்திருந்தே சுலபமாய்க்கிரகித்துக்கொள்ளும்.

37. கே.—துஷ்டமிருகங்கள் தூரத்தத் தப்பித்துக்கொண்டு ஓடத்தக்க முயல்,மான் முதலிய பிராணிகளுக்கு மாத்திரம் காது ஏன்பின்பக்கமாக வளைந்திருக்கின்றது?

ஆ.—ஏனெனில், தம்மைத் தூரத்தும் துஷ்டஜந்துக்கள் எப்போதும் பின்னே வருமாகையால் தூரத்திலே பிற்பக்கமாயுள்ள ஜந்துக்களின் அரவம் காதுக்குட் சுலபமாய்ப் புகும்படி முயல் முதலிய அப்பிராணிகளுக்குக் காதுகள்பின்பக்கமாக நீண்டுவளைந்திருக்கின்றன.

(இன்னும்வரும்.)

## ஓர் கரடியின் கதை.

### 21-ம். அத்தியாயம்.

### காடிக்குழி.

விக்கிரமவீரனுடைய எஜமானன் இவ்வாறு அதைப்போதுமானவரையில் தண்டித்தபிறகு, காலியாயிருந்தபழைய அறைக்கு மறுபடியும் அதை இட்டுக்கொண்டுபோய் தானும் அதுவும் மறுநாள்காலையில் ஆகாரம் புசித்தபிறகு, அது முன்போல் மறுபடி ஓடிப்போகாதிருக்க அதன்கால்களை நன்றாய்க் கட்டிவிட்டான். இப்போது விக்கிரமவீரனுக்கு அவ்வறையிலிருக்க மிகவும் சங்கடமாயிருந்தது. அதன் எஜமானனாகிய ஸ்தூலதேகி பேசும்பேச்சுகளெல்லாம் அதற்கு மஹாவிந்தையாயிருந்தது. அவன் எவ்வளவும் அதனோடு சினேகமாயிருக்கவேண்டுமென்கிற எண்ணங்கொண்டவனாக நடவாமல் கடுகடுத்துப்பேசிக்கொண்டு வந்தபடியினால் அவனைப்பார்க்கவும் அவனைப்பற்றி நினைக்கவும் அதற்கு நடுக்கமாயிருந்தது.

அப்போது மழைபெய்ய ஆரம்பித்தது. விக்கிரமவீரன் கட்டுண்டிருந்த சிறு அறை இருண்டு ஒன்றுந்தெரியாமற்போய்விட்டது. நெருக்கமான அத்தெருவில் ஜனங்கள்போய்க்கொண்டும் வந்துகொண்டு மிருந்தார்கள். அவ்வறையின் ஜன்னல் மிகவும் உயர்ந்திருந்தபடியால் உள்ளிருந்துவெளியே எட்டிப்பார்க்க விக்கிரமவீரனுக்குக் கூடாமற்போய்விட்டது. ஆயினும் எதிர்வீடுகளிலே உயரமாய்வைத்திருந்த ஜன்னல்கள்மாத்திரம் அதன்கண்ணுக்குத்தோன்றின. மழைபெய்வதனால் நனைந்துள்ளதெருக்களில் நடப்போருடைய இடைவிடாக்காலடிச்சப்தமும் மேற் கூரைகளினின்றும்கீழேவிழும் மழைத்தாரைகளின் ஓசையும் ஒருவருக்கு ரம்மியத்தைவிளைக்கத்தக்கசப்தங்களல்லவே.

அடுப்பில்பெருங்கட்டையொன்று எரிந்துகொண்டே வந்தபடியால் விக்கிரமவீரன் முன்னைய இராத்திரி முழுவதும் தூங்காமலிருந்தமையினாலே இளைப்படைந்து, அக்கட்டை கனகனவென்று எரிந்துபோகப்போக எரிந்தபாகம் நீறுபூத்து வெளுத்து வருவதைப் பார்த்துக்கொண்டே யிருந்தது. இவ்வாறு அக்கட்டை எரிவதைப்பார்த்துக்கொண்டிருந்த விக்கிரமவீரன் துக்ககரமான தன் நிலைமையைமறந்து, மேகங்களினால் சூழப்பெற்ற தன் அடிநாளைய வாசஸ்தலமாகிய பர்வதங்களிலே சூரியன் அஸ்தமிக்கும்போதுண்டாகும் பிரகாசத்தை இப்போது உற்றுப்பார்க்கிறோமென்று நினைத்துக்கொண்டே அயர்ந்து தூங்கிவிட்டது.

இப்படியிருக்கையில் திடீரென்றுஇரண்டுபெயர் அவ்வறைக்குட்புகுந்து அதன் கயிறுகளைப்பிடித்திழுத்து முரட்டுத்தனமா யெழுப்பினார்கள். அப்போதுஅதன் எஜமானனாகிய ஸ்தூலதேகி வெளியேநின்றுகொண்டு, "இதுமுன்னொருதடவை தப்பி ஓடிப்போய்விட்டபடியால் கெட்டியாய்ப் பிடியுங்கள், இன்னொருதடவை இதுவெளிப்படுமானால் முன்போல அவ்வளவு சொகுசாய்ப்பிடிக்கமுடியாது." என்று உரக்கக் கூவிக்கொண்டிருந்தான். பிறகு அவன் கம்மலானகுரலோடு கடூரக்கூச்சல் போட்டுச்சிரித்து, விக்கிரமவீரன் முன்னாள் இராத்திரி கூரைகளின்மேல் உலாவியதைப்பற்றியும், அங்கிருந்து தண்ணீர்த்தொட்டியில் துரதிர்ஷ்டமாய் வீழ்ந்ததைப்பற்றியும் கொக்கரித்துக்கொண்டே அவ்விருவருக்கும் சொல்லிவந்தான். இவ்வாறு அவன்சொல்லிக்கொண்டுவந்தபோது அவன் விசித்திரமான குரலோசையைக்கேட்ட விக்கிரமவீரனுக்கு, வேறே எந்த சப்தமும் ஞாபகத்துக்குவராமல், ஒருநாள் தன்பிதாவாகிய மந்தானகனுக்குக் கொடியஜலதோஷம் நேரிட்டிருந்தபோது அதுபோட்ட கூச்சல் ஞாபகத்துக்குவந்தது.

ஸ்தூலதேகி இந்தப்படி பேசிச்சிரித்துக்கொண்டிருந்தபோது அந்த இரண்டு ஆள்களும் அது கேட்டுக் கூடவேசிரித்தார்கள். அதைப்பார்த்த விக்கிரமவீரன் தன்னை இவ்வாறு முரட்டுத்தனமாய்ப் பிடித்திழுத்துத், தனக்கு நேரிட்ட கஷ்டநிஷ்டூரங்களைக் குறித்துச் சிரித்துக்கொண்டிருக்கும் அந்த ஆள்களைத் தனக்கிருந்த சக்தியையெல்லாம் உபயோகித்துப் போதுமானவரையில் தண்டிக்கலாமா என்று எண்ணியது. ஆனால் அதனுடையகால்கள் கட்டுண்டிருந்தபடியாலும், வாயுறைபலமாகவும் நெருக்கமாகவும் போட்டிருந்தபடியாலும் ஒன்றும்செய்ய அதற்குக்கூடாமற்போய்விட்டது. மேலும் மனிதனைக்கண்டால் அச்சங்கொண்டு கீழ்ப்படியும் சுபாவம் அதற்குண்டு. ஆகையால் அதை அவ்வறையினின்று வெளியே மழைபெய்துகொண்டிருக்கும் தெருவில் பரபரவென்று அவசரமாய் அந்த ஆள்கள் இழுத்துக்கொண்டுவந்து, அங்கே விட்டிருந்த மூடிய ஓர்வண்டிக்குள் அடைத்தபோது எதிர்க்க அதற்குமுடியாமல் சும்மா இருந்தது. உடனே அந்த ஆள்கள் அந்தவண்டியின்மேற்புறமாக ஏறி உட்கார்ந்துகொண்டு அவ்வீதிகள்வழியாய் பிரயாணப்பட்டார்கள்.

அந்தவண்டிக்கு ஜன்னல்கிடையாதாகையால் வெளியேயிருக்கும் வஸ்துக்களைப்பார்க்க விக்கிரமவீரனுக்குக் கூடாமையினாலே வண்டியில் சிறிது நேரம் உட்கார்ந்துகொண்டு மஹாதுக்கத்தோடு என்னென்னவெல்லாம் எண்ணத் தொடங்கியது.

இருந்த இடத்திலிருந்துகொண்டு, துணிச்சலானகாரியங்களில் பிரவேசிக்கவிருப்பமில்லாமல் சும்மா இருந்திருப்போமானால் இப்போதுகாட்டில்சுவயேச்சையாய்த்தனியேவாழ்ந்துகொண்டாவதிருக்கலாம், அல்லநாமக்கென்று ஒருகுகை ஏற்படுத்திக்கொண்டு மனைவிமக்களோடு சுகமாய்வாழ்ந்துகொண்டாவதிருக்கலாம், நாம் மிகவும் அழகாகவும் சொகுசாகவும் இராவிட்டாலும், பலரையும் ரமிக்கச்செய்யும்படியான வித்தைகளைக் கற்றுக்கொள்ள விவேகமில்லாத மூடனாயிருந்தாலும் நாம்சிறிதுகாலம் நாள்கழித்த நாட்டுப்புறத்து நண்பர்கள் நம்மைப்பிறர்க்கு விற்பனைசெய்திரார்களே, மூப்பன்-கோலன் என்னும் இரண்டு பிள்ளைகளோடு நாம் எவ்வளவுசௌக்கியமாய் அவர்கள் வீட்டில் நாள்கழித்திருக்கலாம், சேடணண்ணை நாமிருந்தபோதும் இப்போதிருப்பதைவிடக் கூடியவரையில் சௌக்கியமாகத்தானிருந்தோம், என்றிவ்வாறு வீணையோசனைகள்செய்து விக்கிரமவீரன் துக்கப்பட்டுக்கொண்டிருந்தது.

அது இவ்வாறு எண்ணிக்கொண்டே அவ்வண்டியில் நெடுநேரம் யாத்திரைசெய்யவேண்டியதாய் நேரிட்டது. புறத்தே என்னென்னவிதமான சங்கடங்களிருக்கினும் அவற்றையெல்லாம் சகித்துக்கொண்டு கூடியவரையில் மனத்திருப்தியடைவது எப்போதும் விக்கிரமவீரனுடைய குணமாகையால் இப்போதும் ஒருவாறு மனந்தேறியது.

மிருகங்களுக்கு மத்தியிலே ஒருவண்டியிலிருந்து நாள்கழிக்கவேண்டியதே தன் தலைவிதியாயிருக்கிறதென்று மனம்தேறியபின், விக்கிரமவீரன் இந்தப்படி இவ்விடத்திலிருந்து வசிக்கையில், மனதுக்குராம்பியத்தை விளைக்கத்தக்கபொருள் ஏதாவதிருக்கிறதா என்று நினைக்கத்தலைப்பட்டது. நல்லகுணமும் மனத்திருப்தியடையும் இயல்புமுடையகரடி எவ்வளவு பீடானஸ்திதியில் உயிர்வாழநேரிடினும் மனச்சந்துஷ்டியடையுமென்றும், இன்னின்னபடியிருந்தால் இன்னின்ன சௌக்கியத்தை யடையலாமேயென்று வீணையோசனைகள்செய்துகொண்டு துன்பப்படுவதனாற் பயனில்லையென்றும் விக்கிரமவீரன் குழந்தையாயிருந்தபோது அதன் தாயாகிய உத்தமஜீவி அதற்குப்பலமுறைசொல்லியிருந்தது. தன்வாசஸ்தலமாகியகுகை சிறிதாயிருக்கிறதென்றுவது, தான்வசிக்கும் காட்டில் கனிமரங்களில்லையென்றுவது முகவாட்டத்தோடு துக்கப்பட்டுக்கொண்டிருக்கும் கரடியைப்பார்க்க அதன்மன அதிர்ப்திக்காக உத்தமஜீவிமிகவும் பரிதாபம்கொள்வதுவழக்கம்.

தன்தாயாகிய உத்தமஜீவியின் வழக்கத்தை நினைப்பூட்டிக்கொண்ட மாத்திரத்தில் விக்கிரமவீரன் மனந்தேறி, இவ்வளவுபெரியவண்டியில்நாம்வசிக்க நேரிட்டதல்லவா என்று வியக்கத்தலைப்பட்டு அவ்வண்டியின் வெளிப்புறத்தில் தன்னைப்போன்ற ஓர் உருவத்தை வர்ணத்தால் எழுதுவார்களா என்றும், அக்கம்பக்கங்களில் என்னமாதிரியான பிராணிகள் இருக்குமோ என்றும் எண்ணத் தொடங்கியது.

இப்படி எண்ணிக்கொண்டிருக்கையில் அவ்வண்டி ஓரிடத்தில்வந்து நின்றது. அங்கிருந்தவர்கள் இதைவெளியே கொண்டுவந்தார்கள். அப்போது அது சுற்றிப்பார்க்கையில், இவ்விடத்தில்கண்டு கேட்டறிய அனேகவிஷயங்களிருக்குமாகையாலும், மற்றக்கரடிகள் தன்னையறிந்துகொள்ளவும் தான் அவைகளையறிந்துகொள்ளவும் இடமிருக்குமாகையாலும், பிறகு தத்தம் பூர்

வவிர்த்தாந்தங்களைப்பற்றியும் துணிச்சலான செய்கைகளைப்பற்றியும் ஒன்றோடொன்று அளவளாவி வசனிப்பதற்கிடமிருக்குமாகையாலும் இதுகேவலம் மனக்கிளர்ச்சிக்கிடமில்லாத ஸ்தலமல்லவென்று விக்கிரமவீரன்முதலில் அபிப்பிராயங்கொண்டது.

அவ்வண்டியினின்றும் ஆள்கள் விக்கிரமவீரனைக் கதவுதிறந்திருந்த அறைமாதிரியாயுள்ள ஓரிடத்திற்குள் நேரே அனுப்பினார்கள். இதுவரையில் தானிருந்த இடத்திற்கும் இப்போது நூதனமாய்த்தான்வந்த இந்த இடத்திற்கும் அதிகவித்தியாசம்; அவ்வறைக்கு,சுவர்களோ கற்சுவர்கள்; ஜன்னலோ கிடையாது; குளிர்காயநெருப்போ இல்லை; கூரைக்குச் சமீபமாக மேலே காற்றும் வெளிச்சமும்வர இருப்புக்கிராதிமாத்திரம் போட்டிருந்தது; தான் அவ்வறைக்குள் எந்தவழியாகவந்ததோ அந்தவழிதவிர வேறே ஒருவழியும் கதவும் அதற்கிருந்தன. ஒருமூலையில் புதிதாய் வைக்கோல் சிறிது குவித்திருந்தது.

சிறிதுநேரம் இவ்விடத்தில் விக்கிரமவீரன் தனியேயிருந்து சுற்றிலும்பார்த்துக்கொண்டிருக்கையில்,விந்தையான ஆளொருவன் சிலதானியங்களையும் ஒருதொட்டியில் தண்ணீரையும் எடுத்துக்கொண்டுவந்தான். அவனைப்பார்க்க மனோகரமாயிருந்தது. பித்தளைப்பொத்தான்கள்மாட்டிய கறுப்பும் நீலமுங்கலந்த சொக்காயைப் போட்டுக்கொண்டும், பொன்னாற்செய்த கழுத்துப்பட்டையை அணிந்துகொண்டும், ஓரத்தில் அகலமாய்ப் பொற்சரிகைநெய்துள்ள ஒருகுல்லாயை அணிந்துகொண்டுமிருந்தான். இவ்வளவு வேடிக்கையான உடுப்பணிந்துகொண்டிருந்த அந்த ஆளைப்பார்க்க விக்கிரமவீரனுக்கு வியப்பாகவும் சந்தோஷமாகவுமிருந்தது. அவன் குளிர்ந்தமுகத்தோடு பட்சமாய்ப் பேசிக்கொண்டிருந்தபடியால் அவனைப் பார்க்கப்பார்க்க அதற்குமிகவும் சந்தோஷமாயிருந்தது. அவன் பேசிக்கொண்டிருந்தது ஏதோ ஒரு விந்தையான பாஷையாயிருந்தபோதிலும் மற்றவர்களுடைய பாஷையைக்காட்டிலும் இவனுடையபாஷை தனக்கு நன்றாய்த்தெரிகின்றதென்றும், இவனே நமக்கு இனி எஜமானனாயிருக்கும்பட்சத்தில், சேடனுடைய பாஷையை எவ்வளவு நன்றாக அறிந்துகொண்டோமோ அவ்வளவு நன்றாக இவனுடைய பாஷையையும் அறிந்துகொள்ளலாமென்றும் விக்கிரமவீரன் எண்ணியது. அந்தஆள் விக்கிரமவீரனுக்குப்போட்டிருந்த வாயுறையைக்கழற்றி அதைத்தட்டிக்கொடுத்து அதற்குச் சற்றும் பயப்படாதவன்போல் அதனிடத்திற்பேசினான். இவ்வாறு அவன் தன்னிடத்தில்வைத்த நம்பிக்கையை நோக்க விக்கிரமவீரனுக்கு அவனிடத்து அதிகபிரீதியுண்டாயிற்று. அது அவன் கைகளைநக்கி, அவன் தன்னிடத்துவைத்த நம்பிக்கை வீண்போகாதென்று அவனுக்குக்காட்டும்படி தன்னாற் கூடியவரையில் முயன்றது.

விக்கிரமவீரன் ஆகாரத்தைத்தின்றுகொண்டிருக்கும்போது அதைப்பார்க்க அந்த ஆள் அவ்விடத்தில் நின்றிருந்து பிறகு அந்த இருப்பு வாயுறையை எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

இதைக்கண்ட விக்கிரமவீரன், அருவருக்கத்தக்க இந்த வாயுறையில்லாமலே நம்மை இவன் சுவயேச்சையாய் விட்டுவைக்கும்படியான அவ்வளவு அதிர்ஷ்டம்பெற்றோமா, என்று தனக்குள்ளே எண்ணித்தூங்குவதற்காக அங்குபுதிதாயிருந்த வைக்கோலின்மேல் படுத்துக்கொண்டு சௌக்கியமானதென்று தனக்குத்தோற்றிய தன்னுடைய வாழ்க்கையைப்பற்றிச் சந்தோஷமடைந்தது.

அன்றுமாலை இன்னும் நல்லஆகாரம் அதற்குக் கிடைத்தது. அது அன்றிராத்திரி அந்த அறையிலேயே விடப்பட்டிருந்தபடியால், நாம் இன்னும்

வண்டியில் யாத்திரைசெய்யவேண்டுமோ, என்னவோ என்று தனக்குள் எக்கங்கொள்ளத்தலைப்பட்டது.

அந்தஆள் மறுநாட்காலையில் ஆகாரங்கொடுக்கவந்தபோது விக்கிரமவீரன் அவனிடத்தில் அதிகபரிவுகொண்டிருப்பதை முகமலர்ச்சியினாற் குறிப்பித்து அவன் தன்னிடத்திற் சாந்தமாய்ப்பேசியதைச் சந்தோஷமாய்க்கேட்டு,அவன் அச்சிறு அறைக்குள் நிர்ப்பயமாய்வரலாமென்பதை அவனுக்குப் பலவகையாலுங் குறிப்பித்தது. அந்தஆள் தன்னிடத்தில் மிகவும்பட்சமாயிருக்க விரும்புகிறானென்றும், இதுவரையில் பெருங்கூச்சல் போட்டு முரட்டுத்தனமாய் நடத்திவந்த ஸ்தூலதேகிபயம் சிறிது ஒழிந்ததென்றும், விக்கிரமவீரன் நிச்சயமாய் அறிந்துகொண்டவுடனே பழையபடி மனக்குதூகலத்துடன் அச்சிறு அறையைச் சுற்றிச்சுற்றி நடந்துவந்து சிரிப்புக்கிடமான சில வேடிக்கைகளைக்காட்டியது. தங்களுடைய சாமர்த்தியமொன்றையே விசேஷமென்று கருதாமல் பிறருடைய சாமர்த்தியத்தையுங் கண்டுமதிக்கும் இயல்புடையோர் யாவர்க்கும் விக்கிரமவீரன்செய்யும் வேடிக்கைகள் மனோகரத்தை விளைக்காமற்போகா. அந்தவேலையாள் பிராணிகளுடைய நடை பாவனை முதலியவற்றை நெடுநாளாகக் கவனித்து அவைகளின் விஷயத்தில் நன்றாய்ப் பழகினவனானபடியால் விக்கிரமவீரன் தன் மனக்கிளர்ச்சியையும் நன்றியறிதலையும் குறிப்பாகக்காட்டியமாத்திரத்தில் அதன் உள்ளக்கருத்தை அறிந்துகொண்டான். அதுமுதல் விக்கிரமவீரனுக்கும் அந்தவேலையாளுக்கும் இடைவிடாநேசமுண்டாயிற்று.

அந்தவேலையாள் அவ்வறைக்கிருந்த மற்றொருகதவைத் திறந்துகொண்டு வெளியேபோனபோது விக்கிரமவீரனும் அவ்வறையைவிட்டு அவன்பின்னாகவே வெளியில்வந்தது.

அவ்விடம் நன்றாய்க் காற்றுவரத்தக்க வெற்றவெளியான ஒருமுற்றம் போலிருந்தது. அங்கேமத்தியில் கனத்தமரம் ஒன்றுநட்டிருந்தது. ஒருபுறத்திலே பெரிய தண்ணீர்த்தொட்டியொன்றிருந்தது. மற்றொருபுறத்திலே இரும்பினால் கிராதிபோட்டிருந்தது. அதன்மூலமாக விக்கிரமவீரன் பார்த்தபோது தனக்கு முன்னும் பின்னும் தன்னிலும் பெரிதும் வேறாயதுமான சிலபிராணிகள் மேலுங் கீழுமாய்ப் போவதையும் கிராதிகளின்பக்கத்தில் படுத்துக்கொண்டிருப்பதையும், அவைகளுக்குச்சுற்றிலும் தானிருந்த இடத்திற்குப் போட்டிருந்ததுபோலவே இரும்பினாற் கிராதிபோட்டிருந்ததையுங் கண்டது. அந்தப்பிராணிகளெல்லாம் போதுமானவளவில் சௌக்கியமாகவே நல்லஸ்திதியிலிருப்பதாகக்காணப்பட்டன. அவைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட இடங்கள் போதுமானவளவில் பெரிதாகவேயிருந்தபோதினும், விக்கிரமவீரனுக்கு விடப்பட்டிருந்த இடத்தைக்காட்டினும் அவைகளிலெதுவும் பெரிதல்ல ; விக்கிரமவீரனுடைய பர்வத வாசஸ்தலமாகிய குகையைக்காட்டினும் இது எவ்வளவோ விசாலமானது. இவ்வளவு விசாலமானஇடத்தில் அது இதுபரியந்தம் வசித்ததேகிடையாது. தரையோ அழகாய்த்தளவரிசை போட்டுச் சுத்தமாக இருந்தது.

பறவைகள் மிருகங்கள் ஆகியஇவற்றின் பலவகைப்பட்ட விந்தையான சப்தங்களுக்குள்ளே சில சமீபத்திலிருந்தும் சிலதூரத்திலிருந்து வருவதுபோலும் விக்கிரமவீரனுக்குக்கேட்டபடியால்,சமீபத்திலேயே தான் பார்க்கக்கூடிய பிராணிகளைவிட இன்னும் அனேக பிராணிகளிருக்கவேண்டுமென்று அதுநிச்சயித்துக்கொண்டது.

# அவரவருரிமை அவரவரடைவர்.

(தொடர்ச்சி.)

கஜபதியென்போனைத் தூக்கிக்கொண்டுசென்ற யானை பலவனங்களையும் நாடுநகரங்களையும் மலைகளையுங் கடந்து இறுதியாகவீரகண்டாமணி நகரத்துக்குட் பிரவேசித்தது. இதைக் கண்டமாத்திரத்தில் அந்நகரத்திலிருந்த மந்திரிமார்முதலிய யாவரும் ஒருங்குகூடிக் கஜபதியினிடத்தில் இராஜவிசுவாசம் பாராட்டி . அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்து மணிமகுடம் சூட்டி அவனையேஅரசனாக வைத்துக்கொண்டார்கள். தன் இளைய சகோதரன் தன்னுடன்கூடவிருந்து போகபாக்கியங்களை அநுபவிக்கவில்லையே யென்னும் பெருந்துயரம் கஜபதிக்கு ஒருபுறமிருந்தபோதினும் அவன் தன் இளைய சகோதரனைத்தேடிவரும்படி யாரையேனும் இப்போது கட்டளையிட்டனுப்பினால் தன்னுடைய பூர்வதரித்திரதிசை ஒருவேளை அந்நகரத்தாருக்குத் தெரிந்து அதனால் தனக்கு அவமான முண்டாகுமென்னும் அச்சங்கொண்டான். ஆயினும் விசித்திரவிஜயனாகிய தன் இளையசகோதரன் அதிக புத்திகோசாமுடையவனாகையால் எவ்வகையாலும் பிழைக்க வகைதேடித் தன் நகரத்தை வந்தடைவானென்னும் திடத்தினால் கஜபதி ஒருவாறு மனந்தேறினான். இனி விசித்திரவிஜயனுடைய விசித்திரமான சரித்திரத்தைக் கூறுவோம்.

தன் தமையனை ஏதோ யானை தூக்கிக்கொண்டு ஓடிப்போய்விட்டதென்னும் துக்கமிகுதியினால் விசித்திரவிஜயன் அக்காட்டைவிட்டுப் புறப்பட்டு நெடுந்தூரம் யாத்திரை செய்துகொண்டேபோகையில் பசிக்குஆற்றாதவனாகி நடைதளர்ந்து ஒருபட்டினத்திற்குட் பிரவேசித்து அங்கிருந்த ஒரு தாசிவீட்டுத்திண்ணையில் கண்பஞ்சடைய உட்கார்ந்துகொண்டிருந்தான். அப்போது அவ்வீட்டுக் குரியவளாகிய மோகனாங்கி என்னும் அதிரூபலாவண்ணியப்பெற்ற தாசியொருத்தி விசித்திரவிஜயனைக் கண்டமாத்திரத்தில் அவனுடைய முகத்தில் இராஜதேஜஸ் விளங்குவதையும் அவன் அதிக பசியாயிருப்பதையுங் கண்டு அவ்விஷயத்தைத் தன் தாயாராகிய பெருந்தேவிக்கறிவிக்க, அவள்-பெண்ணே! அவன் இப்போது கேவலம் வறியவனா யிருக்கிறானென்றெண்ணவேண்டாம், அவனால் ஏதேனும் நமக்கு மிக்க அநுகூலம்கிடைக்கக்கூடுமென்று அவனுடைய முகவிலாசத்தால் எனக்குத்தெரிகிறது, அவனைவிடாதேயென்று சொல்ல,உடனே தன்பயனொன்றையே முக்காலத்துங் கருதும் இயல்புடைய மோகனாங்கி விசித்திரவிஜயனுக்கு இனியவசனங்கள்கூறி உள்ளே அழைத்துக்கொண்டுபோய்ச் சுவையான அன்னபானாதிகளைத்தந்து உபசரித்தனள். நிஷ்கபடியாகிய விசித்திரவிஜயன் பசிநீங்கப்பெற்று மோகனாங்கியின் பரிவுக்காக மகிழ்ச்சியடைந்தான். அவ்வாறு மகிழ்ச்சிகொண்டகாலத்தில் அவன்நகைத்தபோது

பலபலவென்று நவரத்தினங்கள் உதிரக்கண்ட மோகனாங்கி அளவிலா வியப்படைந்தவளாகி, ஆடவரை மயக்கத் தான் கற்றிருந்த மாயவித்தைகளையெல்லாம் அவனிடத்திற்காட்டி அவனுயிரும் தன்னுயிரும் ஒன்றேயென நடித்துவந்தாள்.

அவளுடைய மாயவித்தைகளுக்கு மயங்கி விசித்திரவிஜயன் ஒருநாள் மதிமாழ்கியிருக்கையில், மோகனாங்கி அவனைப்பார்த்து, உன் பூர்வவிர்த்தாந்தம் யாது? நகைக்கும்போதெல்லாம் உன்வாயினின்று நவரத்தினம் வீழ்வதற்குக் காரணம் என்? கூறவேண்டுமென்று இரந்துகேட்க, அதற்கு அவன் ஆதியோடந்தமாகத் தன் பூர்வ விர்த்தாந்தத்தை யெல்லாங்கூறி, அம்மாங்கனியின் சிறுகொட்டை தன் வயிற்றிலிருக்குமளவும் தன்னிடத்தில் அப்படிப்பட்ட விசித்திரம் நிகழ்ந்துகொண்டிருக்குமென்று உண்மையைவிளம்பிவிட்டான். விசித்திரவிஜயன் தங்களுடைய வீட்டிற்குவந்ததுமுதல் இதுவரையிலே அவனை அடிக்கடி நகைக்கச்செய்து வீடுமுழுமையும் திரள்திரளாக மோகனாங்கியும் பெருந்தேவியும் நிரப்பிக்கொண்ட நவரத்தினத்திரள்களுக்கு அளவில்லையாயினும் அவர்களுடைய ஆசையும் அளவற்றிருந்தபடியால் அவர்கள் அவனுடைய வயிற்றினின்றும் அக்கொட்டையை அபகரிக்கவேண்டுமென்னும் துர் எண்ணங்கொண்டவர்களாகி ஒருநாள் அவனுக்கு ஏதோ தேகம் அசௌக்கியமாயிருக்கிறதுபோற்பரிந்து சில நேர்வாளமாத்திரைகளை அவனுக்குக்கொடுத்தார்கள். அப்போது ஓயாமல் அவன் மலவிசர்ஜ்ஜனம் செய்துகொண்டுவந்தபடியால் மூர்ச்சையடைந்தான். அப்போதுவிசித்திரவிஜயனுடையவயிற்றிலிருந்த அம்மாங்கனியின் சிறுகொட்டையும் வந்துவீழ்ந்தவுடனே எடுத்துப் பொருளாசைமிகுதியால் அசுத்தந்தோன்றப் பெறாதவளாகி அதை அலம்பி மோகனாங்கி தின்றுவிட்டு, உடனே மூர்ச்சையாயிருந்த விசித்திரவிஜயனைத் தெருத்திண்ணையிற் கொண்டுபோய்ப் போடச்செய்து, இனி இவனால் நமக்காவதென்ன என்று நினைத்துக் கதவைத் தாளிட்டுக்கொண்டாள்.

நெடுநேரம்பொறுத்து மயக்கந்தெளியப் பெற்ற விசித்திரவிஜயன் எழுந்து கதவைப் பன்முறைதட்டியும் மோகனாங்கி அதைத் திறவாதிருப்பது கண்டு, மோகனாங்கி செய்தமோசத்தை யுணர்ந்து, துக்கித்துக்கொண்டே அவ்வூரிலிருந்த சில வீடுகளில் பிச்சையெடுத்துத் தன்பசியைச் சிறிது தணித்துக்கொண்டு அந்நகரத்தை விட்டு ஓர்காட்டின் வழியாகப் போய்க்கொண்டிருக்கையில், பகவானே! அச்சந்நியாசி நெடுநாளாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த மாங்கனியை அவனை ஏமாற்றிக்கொண்டுவந்துவிட்டது அதர்மந்தானே? அக்கொட்டையினால் நான் நிரந்தரமாய்ச் சுகமடைவதற்குக் கொடுத்துவைத்திலேனே, "எளியரை வலியர்வாட்டில் வலியரையிருநீர்வைப்பில், அளியறத் தெய்வம்வாட்டும்." என்னும் மேலோருடைய வாக்கியத்தை எனக்கு மெய்ப்பிக்கந்தான் நீ அக்கொட்டையை என் வயிற்றினின்றும்மோக

ணுங்கியைக் களவாச்செய்தனையோ? நின்கருத்தை அறிகிலன், நான் செய்தது அதருமமாயின் நான் அதை இழப்பது நியாயந்தானே, என்றிவ்வாறு தனக்குள்ளே பேசிக்கொண்டே போனான்.

அப்போது அவனுக்கெதிரில் சிறிதுதூரத்திலே இருந்த ஒரு ஆலமரத்தினடியில் நால்வர் பேரிரைச்சலோடு சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள். இவன் அவர்களுடைய கண்ணுக்குப் புலப்படாமல் ஒரு மரத்தடியில் மறைவாக உட்கார்ந்திருந்து அங்கேநடக்கும் விர்த்தாந்தத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். அக்காட்டில் நெடுங்காலந்தவஞ்செய்துகொண்டிருந்த ஒருமுனிபுங்கவருக்கு நால்வர் சிஷ்யர்களாய் ஊழியஞ்செய்துவந்தார்கள். அம்முனிபுங்கவருக்கு இனிமேல் உலகத்தில் சஞ்சாரஞ்செய்ய இஷ்டமில்லாதிருந்தபடியால் அவர் தம் சிஷ்யர் நால்வரைநோக்கி, மைந்தரே! யான் இனிமேல் யோகத்திலிருந்து சுவாநுபூதியினால்விளையும் ஆனந்தத்தேறலைச்சுவைத்து இறுதியிலீஸ்வரன்திருவடியை அடையவிருப்பங்கொண்டேனாகையால் நீங்கள்இவ்விருட்சத்திற்கடியில் ஒரு பெரிய நிலவறையமைத்து அதில் என்னைச் சேமித்துவிடுங்கள், நீங்கள் என்னை நெடுநாளாய் அடுத்திருந்ததற்காக நான் உங்களுக்குச் சில அருமையான பண்டங்களைத்தருகிறேன், அவற்றைக்கொண்டு சகோதரவாஞ்சையோடு நீங்கள் உலகத்தில் சுகமாய் வாழக்கடவீரென்றுசொல்லி, ஒருவனுக்கு வேண்டியதையெல்லாங் கொடுக்கத்தக்க பை ஒன்றையும், வேண்டியபோதெல்லாம்அறுசுவையோடுகூடிய திவ்வியமான போஜனத்தை எதிரில்கொண்டுவந்து வைக்கத்தக்க கிண்ணம் ஒன்றையும், சுழற்றியெறிந்தால் எப்படிப்பட்ட சத்துருவையும் போய் இருதுண்டாகவெட்டிவிடத்தக்க மந்திரவாள் ஒன்றையும், நினைத்த இடத்திற்கு ஒருநொடியிற் கொண்டுபோய்விடத்தக்க ஒருஜதை சந்தனப்பாதக்குறடையும் அவர்களுக்குத்தந்து,இவற்றை நீங்கள் ஆன்மநேய ஒருமைப்பாடுடன் பகிர்ந்து கொள்ளுங்களென்று கூறினார். அதுகேட்ட சிஷ்யர் நால்வரும் அம்முனிபுங்கவரை நோக்கி, எம்பெருமானே! அவ்வாறேசெய்கிறோம் என்று சொல்லி, ஒருநிலவறையமைத்து அதில் அப்பெரியவரை அடக்கஞ் செய்துவிட்டார்கள். பிறகு அந்நான்கு அரியபதார்த்தங்களைப் பகிர்ந்துகொள்ளும் விஷயத்தில் அவர்கள்பெருஞ்சச்சரவிட்டு ஆசாரியருடைய கட்டளையைமீறிச் சகோதரவாஞ்சையையிழந்து நெடுநேரம் போராடிய பின்தத்தம்ஊரிலுள்ள தகுந்த சிலகனவான்களைக்கொண்டு மத்தியஸ்தம் செய்வித்து அவ்வொவ்வொருபண்டத்தையும் பெறுதற்குரியார் இன்னாரின்னாரென்பதை அறிந்துகொள்ளலாமென்றுதீர்மானித்து அந்நான்கு பொருள்களையும் அங்கிருந்தஆலமரத்தின் ஒருபொந்திலேபத்திரப்படுத்திப்போய்விட்டார்கள்.

இதுவரையில் நடந்துவந்த விர்த்தாந்தத்தையெல்லாம் ஆதியோடந்தமாகத் தூரத்தில் மறைவாய்க்கேட்டுக்கொண்டிருந்த விசித்திரவிஜயன் அம்மரத்தண்டைவந்து முனிபுங்கவருடைய சமாதியின்

மேலிருந்த மண்ணை மெல்லவெடுத்து அங்கிலவறையைத்திறந்து அவருக்குத் திர்க்கதெண்டம் சமர்ப்பித்து,சுவாமி ! தேவரீருடைய கட்டளைப்படி பயபக்தியோடு அந்நான்கு அரிய பதார்த்தங்களையும் தேவரீருடைய திருவருட்பிரசாதமென்று கொள்ளாமல் சுவாமிகளுடைய சிஷ்யர் நால்வரும் ஒருவரோடொருவர் போர்புரிந்து அவற்றை இம்மரப்பொந்தில் வைத்துப்போய் விட்டார்கள்; அவற்றை எனக்கு அநுக்கிரகஞ்செய்தால் தெய்வப்பிரசாதமாகக் கருதிப்பாலித்து வருவேனென்று குறையிரந்தான். அதுகேட்ட முனிபுங்கவர் அவன்கூறும் விஷயம் உண்மைதானென்று தம்முடைய ஞானதிருஷ்டியினாலறிந்து, மைந்தனே ! ஆசாரியவாக்கிய பரிபாலனஞ்செய்யாத அப்பாவிகள் இவற்றைப்பெற அருகரல்லர், இவைகளுக்குரியவனுடைய அநுமதியின்றி இப்பொருள்களை எடுத்துக்கொண்டு போகும் பட்சத்தில் அவற்றாலாகிய பயன் கொண்டுபோகிறவனுக்குச் சிறிதுகால முண்டாயினும் அவைநீடித்து அவனிடத்தில்நில்லாவென்பதையுணர்ந்தமதியூகியாகையால் நீயே இவற்றை எடுத்துக்கொண்டு சுகமடைவாயென்று கட்டளையிட, அதுகேட்டு விசித்திரவிஜயன் முனிபுங்கவருக்குத் திர்க்கதெண்டம் சமர்ப்பித்து அங்கிலவறையை முன்போலவேமூடி மேலே சமாதியைப் பூர்த்திசெய்து அம்மரப்பொந்திலிருந்த பை, பாத்திரம், மந்திரவாள், சந்தனப்பாதக்குறடு ஆகிய இவற்றையெடுத்துக்கொண்டான். உடனே தனக்கு அறுசுவையோடுகூடிய உணவு வேண்டுமென்று நினைத்துஅப்பாத்திரத்தைத்தொட அது அவனுக்கு அவ்வாறே திவ்வியமான போஜனத்தையளித்தது. அதையுண்டு விசித்திரவிஜயன் தன் பசியைத் தணித்துக்கொண்டவுடனே மோகனாங்கியின் ஞாபகம் அவனுக்கு வந்தபடியால்அவன்மறுபடியும்மோகனாங்கி வீட்டுக்குப்போய்க் கொண்டிருக்கையில் இவனுடைய முகத்திற் சந்தோஷக் குறிப்பைத்தூரத்திலிருந்தே கண்ட பெருந்தேவி-இவனிடத்தில் இன்னும் ஏதோ சில நல்லபொருள்கள் இருக்கின்றனவென்று யூகித்தறிந்துஅவனுக்கினிய வசனங்கூறி உள்ளே இட்டுக்கொண்டுபோய், துரையே! உம்முடைய தேக அசௌக்கியத்தை நீக்குவதற்காக நல்ல எண்ணத்துடன் ஒரு ஔஷதங்கொடுத்ததேயன்றி மற்றப்படி ஒன்றுஞ் செய்ததில்லையாதலால் நீர்முன்போலவே அன்புடன்வந்து கலந்து வித்தியாசம்பாராட்டாமல் சுகமாயிருமென்றுகூற, விசித்திரவிஜயன் மதிமயங்கி அவளுட்கருத்தை யறியாதவனாகி முன்போலவேஅங்கிருந்தான். இப்படியிருக்கையில் ஒருநாள் இரவில் படுத்துக்கொண்டிருந்தபோது காற்றுவாராமல் வீடுமிகவும் அசௌக்கியமாயிருந்தபடியால், ஒருவர்கண்ணுக்கும் தெரியாமல் தான் வைத்திருந்த அந்நான்கு அரிய பொருள்களுக்குள்ளே பையை எடுத்து அதில் கையைநுழைத்து, இவ்வீடு ஆறடுக்குமாளிகையாக அமையவேண்டுமென்றும், நாற்புறமும் ரமணீகரமான சிங்காரத்தோட்டங்கள் ஏற்படவேண்டுமென்றும், இரத்தினகசிதமான தூங்குமஞ்சம்முதலியசகலஉபகரணங்களும்தோ

ன்றவேண்டுமென்றும், தென்றற்காற்று நாற்புறமும் மெல்லெனவீசவேண்டுமென்றும் விரும்பியமாத்திரத்தில் அவைகளெல்லாம் அவ்வாறே அமைந்துவிட்டன. பொழுதுவிடிந்த மாத்திரத்தில் இவ்வற்புதத்தைக்கண்ட மோகனாங்கியும் பெருந்தேவியும் ஆனந்தபரவசராகி விசித்திரவிஜயனைத் தேனொழுகுவதுபோல் இன்சொற்களால்மகிழ்வித்து அதன் காரணத்தைக் குறையிரந்துகேட்க, விசித்திரவிஜயன் "தையலார் மயலிற்பட்டோர் தமக்கொருமதியுண்டாமோ?" என்றபடி ஆதியோடந்தமாகத் தனக்குக்கிடைத்த நான்குபொருள்களின் வரலாற்றை வெளிப்படுத்திவிட்டான். ஆயினும் அப்பொருள்களை அவன் ஒருவர் சுவாதீனத்திலும்வைக்காமல் தானே தன் இன்னுயிரைப்போற்பாதுகாத்துவந்தான்.

(இன்னும் வரும்.)

## காவியலட்சணம்.

(தொடர்ச்சி.)

சென்ற சஞ்சிகைக்குமுன் சஞ்சிகையிலே காவியலட்சணம் என்னுந் தலைப்பெயரிட்டு, காவியம் பெருங்காவியமெனவும் சிறுகாவியமெனவும் இருவகைப்படுமென்றும், இருபகுப்பாகிய அக்காவியத்தின் லட்சணம் இப்படிப்பட்டதென்றுங் கூறினோமல்லவா? இப்போது தமிழில்பெருங்காவியங்களெனச் சிறப்படைந்துள்ள நூல்கள் சிந்தாமணி - சிலப்பதிகாரம் - வளையாபதி - மணிமேகலை - குண்டலகேசி என்னும் ஐந்தேயாம். இப்பஞ்சகாவியங்களும் சமணர்களாற் செய்யப்பட்டன. இலக்கியங்களுக்குள்ளே சிறப்புடையவைகளாயிருக்கும் பஞ்சகாவியங்களில் ஒன்றேனும் இந்துக்களுக்கு மூலாதாரமாயுள்ள வேதசம்பந்தமான மதஸ்தர்களாகிய சைவ வைணவர்முதலியவர்களாற் செய்யப்படாமல் யாவுஞ் சமணர்களாலேயே ஏன் செய்யப்பட்டிருக்கவேண்டுமென்னும் சந்தேகம் இதை வாசிக்குஞ் சிலர்க்குத் தோன்றுதல்கூடும். அதைப்பற்றிச் சிறிது விவகரிப்போம்.

நெடுங்காலத்திற்கு முன்னே இத்தென்னிந்தியாவைச் சேர சோழ பாண்டியனென்னும் அரசர்கள் மூன்றுபிரிவாகப்பிரித்து அரசாட்சிசெய்து வந்தபோது பாண்டிநாட்டின் இராஜதானியாயிருந்த மதுரையில் தெய்வீகம்பொருந்திய மூன்றுதமிழ்ச்சங்கங்கள் இருந்தனவென்றும், அவற்றுள் முதற்சங்கத்திலே 4449 வித்வான்கள் சேர்ந்திருந்தனவென்றும், இடைச்சங்கத்திலே 449 வித்வான்கள் கூடியிருந்தனவென்றும், கடைச்சங்கத்திலே 49 வித்வான்கள் இருந்தனவென்றும் அடியில்வரும் பழையபாசுரத்தால் விளங்குகின்றது.

"நூலர்நாலாயிரநானூற்றுநாற்பத்தொன்பான்
பாலாகானூற்றுநாற்பத்தொன்பான்—மேலாநாற்
பத்தொன்பான்சங்கமறுபத்துநாலாடலுக்குங்
கத்தன்மதுரையிற் சொக்கன்."

மேற்படிமூன்று சங்கங்களுக்குள்ளே கடைச்சங்கத்துவித்வான்கள் நாற்பத்தொன்பதின்மரும் திருவள்ளுவ நாயனாரால் இயற்றப்பட்ட அற்புதமான திருக்குறளென்னும் நூலுக்குச் சாத்துகவிகள்தந்து மறைந்தனரென்று நாமசரித்திரத்தினாலறிகிறோம். ஆகையால் திருவள்ளுவநாயனார் திருக்குறளியற்றிய காலமும் கடைச்சங்கம் மதுரையில் மறைந்தகாலமும் ஒன்றென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவார், பூர்வீகசரித்திரங்களை எழுதிவைக்கையில் வருஷம் முதலிய விவரங்களைத் தெளிவாய்க் காட்டுவது யாதுகாரணத்தாலோ இந்துக்களுக்குப் பெரும்பாலும் வழக்கமில்லாதபடியால் இப்பூர்வீக விர்த்தாந்தங்கள் நடந்தகாலத்தை இந்துக்களின் சாஸ்திரங்களைக்கொண்டே நிச்சயிப்பது பெரும்பாலும் கூடாமையாயிருக்கிறது. ஆயினும் நம்முடைய பூர்வீக சாஸ்திரங்களை நடுவுநிலைமையோடு ஆராயப்புகுந்த ஆங்கிலேய பண்டிதர்கள் - இந்தியாவிலே பூர்வகாலத்தில் நடந்த சில விர்த்தாந்தங்களையும், அதேகாலத்தில் ஐரோப்பாவில் நடந்த சிலவிர்த்தாந்தங்களையும் ஒத்திட்டு ஒருவாறாகக் காலவரையறையை யூகித்து நிர்ணயித்திருக்கிறார்கள். தமிழ்ப்பதங்களுக்கு ஆங்கிலேயப்பொருளுரைக்கும் அகராதிகள் பலவற்றுள்ளும் சிறந்ததாயும், தேர்ந்த சிலதமிழ்வித்வான்களின் உதவியைக்கொண்டு சித்தம்பண்ணி (Winslow.) வின்ஸ்லோ என்பவரால் பூர்த்திசெய்யப்பட்டதாயுமுள்ள அகராதியின் முகவுரையில் தமிழ்ப்பாஷையின் அருமையையும் பெருமையையும் பூர்வசரித்திரத்தையும் கூறிக்கொண்டுவரும் சந்தர்ப்பத்திலே, திருவள்ளுவநாயனார்குறள் செய்தகாலம் கிறிஸ்துபிறந்த சுமார் 800 வருஷத்திற்குப் பிறகென்றும், சமணபண்டிதராகிய திருத்தக்கதேவர் சிந்தாமணி என்னும் பெருங்காவியத்தை இயற்றியகாலம் கி - பி. சுமார் 900 வருஷத்திற்குப் பிறகென்றும், மஹாகவியாகிய கம்பர் இராமாயணம் என்னும் இதிகாசத்தைத் தமிழில் செய்தகாலம் கி. பி. 1000 வருஷத்திற்குப் பிறகென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விஷயங்களைநோக்க மதுரைக் கடைச்சங்கமிருந்து மறைந்துபோன சில காலத்திற்குப் பிறகே சிந்தாமணிமுதலிய பெருங்காவியங்கள் சமணர்களால் செய்யப்பட்டிருக்கவேண்டுமென்று யூகிக்கவேண்டியதாயிருக்கிறது. பூர்வகாலத்தில் பாண்டியர்களால் ஆகரிக்கப்பட்ட மதுரைச்சங்கத்தவர்களாயிருந்த வித்வான்கள் நூல்களுக்குள்ளே விசேஷமானவைகளாயுள்ள பெருங்காவியங்களைச் செய்திராமலிருப்பார்களா? செய்தேயிருப்பார்களென்பது எல்லோருடைய துணிபு. அவ்வாறு அவர்கள்செய்தகாவியங்கள், சிந்தாமணிமுதலிய காவியங்களைச்சமணர்கள் பிற்காலத்திலே செய்வதற்குள்ளேதாமே அழிந்துபோயாவதிருக்கவே

ண்டும். பிறரால் அழிக்கப்பட்டாவதிருக்கவேண்டும். நெடுங்காலமாகச் சமணர்கள் சைவ வைணவர்களிடத்துத் துவேஷம் பாராட்டி அவர்களை நிர்மூலப்படுத்தப் பல்வகையாலும் எத்தனித்துவந்தார்களென்று நாம்சரித்திரங்களாலறிகிறோம். இதனால், சமணர்கள் தமக்குமுற்காலத்திருந்த சைவவைணவமதச் சார்பாயுள்ள மதநூல்களை யழித்துத்தம் மதக்கோட்பாடுகளை விளக்கத்தக்க நூல்களை அவைகளுக்குப் பர்த்தியாகச்செய்திருக்க வேண்டுமென்று சிலர் யூகிக்கிறார்கள்.

## சம்பாஷணையைப்பற்றிய விதிகள்.

(தொடர்ச்சி.)

நாம் யாருடன் பேசிக்கொண்டிருக்கின்றோமோ அவர்கள் நமக்கு எவ்வளவு ஆப்தர்களாயிருந்தாலும் நம்மைப்பற்றி நாமே சிறப்பித்து அவர்களிடத்தில் எவ்வளவும் பேசிக்கொள்ளுதல் கூடாது. அப்படி பேசிக்கொள்வதனால் அவர்கள் நம்மை நன்குமதித்துப் புகழவேண்டுமென்றல்லவோ நாம்கருதுகின்றோம்? அக்கருத்து நிறைவேறவேண்டுமென்கிற எண்ணம் நமக்கு வாஸ்தவத்திலிருக்குமானால் நம்மைப்பற்றி நாமேசிறப்பித்துப் பேசிக்கொள்ளாமலிருப்பதே அதற்குத்தக்க உபாயம். நம்முடையபெருமை அவர்களுக்குத் தெரியாமற்போய் விடுகிறதேயென்னும் ஏக்கம்நமக்குவேண்டுவதில்லை. எதார்த்தத்தில் நம்மிடத்து ஏதேனும் சிறந்தகுணமிருக்குமாயின் அது நம்முடைய செய்கைகளினாலாவது நம்மைப்பற்றிவேறுசிலர் எடுத்துச் சொல்வதனாலாவது எப்படியும் விளங்கிவிடும். நாம் ஒருவரிடத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது ஓரிடத்தில் நடந்த ஏதோ ஒருவிஷயத்தைப்பற்றி அவர் நம்மைக் கேட்டகாரணத்தினால் நாம் நடந்த விர்த்தாந்தத்தை நடந்தபடிசொல்ல நேரிடுமாகில், அவ்விடத்திலே நமக்கு நடந்தசிறப்பொன்று நீங்கலாக மற்றெல்லாவிஷயங்களையும்சொல்லலாம். நம்மைப்பற்றிய விஷயம் அதிசீக்கிரத்தில் அவருக்கு எப்படியும் தெரிந்தேவிடும். அப்போது அவருக்கு, நாமே நம்மைப்பற்றிய சிறப்பான விஷயத்தைக்குறித்துச் சொல்லியிருந்தால் நம்மிடத்தில் எவ்வளவு மதிப்புண்டாகுமோ அதைவிட நூறு பங்கு அதிகமதிப்புண்டாகும்.

5. நாம் ஒருவரிடத்தில் சம்பாஷித்துக்கொண்டிருக்கும்போது கூடியவரையில் வேறொருவரைப்பற்றி இழிவாகப் பேசாதிருக்க முயலவேண்டும். நெடுநேரம் சம்பாஷித்துக் கொண்டிருப்பவர்களுக்குள் பெரும்பாலும் இத்துர்க்குணம் விளைவதுண்டு. ஒருவர் தமக்குஎவ்வளவு ஆப்தனாயிருக்கினும் அவருடைய நற்குணங்களைப்பற்றி நீடித்துப்பேசப் பெரும்பான்மையோர்க்கு மனம் எழுவதில்லை. ஒருவருடைய துர்க்குணத்தைப்பற்றிப் பேசப்பேச இனிப்பாயிருப்பது

உலகவழக்கம். ஆகையால் இதைப்புத்திமான்கள் கூடியவரையில்
ஒழிக்க முயலவேண்டும். ஒருவருடைய குணகுணங்களைப்பற்றி
நேரில் எவ்வளவுபேசினாலும் பாதகமில்லை. ஏனெனில், நாம் பேசுவ
தற்குச் சமாதானம் அப்போதைக்கப்போது உடனே அவர் சொல்
லநேரிடும். இருவர்க்கும் மனக்களங்கம் அறவே யொழியும். அப்படி
க்கன்றி ஒருவர் இல்லாதபோது அவரைப்பற்றி மற்றொருவரிடத்தில்
நாம் ஒரு அசையேனுங்குறைவாகச் சொன்னபோதிலும் அதைஇர
ண்டாமொருவர் ஒருசொல்லாகவும்,மூன்றாமொருவர்இரண்டுமூன்று
சொற்களாகவும்,நான்காமொருவர்ஒருவாக்கியமாகவும்பெருக்கி, நாம்
யாரைப்பற்றிஒருஅசைகுறைவாக ஆதியில்பேசினோமோ அவர்செவி
க்கு எட்டவிடுவர். இவ்வாறு ஒன்றைப் பலவாகப்பெருக்குவோர்நமக்
கும் வேறொருவருக்கும் பகைமையைவிளைக்கவேண்டுமென்னுங் கெ
ட்ட எண்ணத்துடன் பெரும்பாலும் செய்வதில்லை. ஆனால் ஒருவிஷய
த்தை ஒருவர் ஒருவரிடத்திற்கேட்டு மற்றொருவரிடத்திற் சொல்
லும்போது ஏதேனும் ஒன்றை நூதனமாய்ச் சேர்த்துச்சொல்வது
மானிட இயற்கை. மேலும் ஒருவரைப்பற்றி நாம் ஒருவிஷயத்தைச்
சொல்லும்போது என்னமாதிரியாக என்னஓசையுடன் சொன்னோ
மோ அதேமாதிரியாகவும் அதே ஓசையுடனும் இடையில் கேட்டி
ருந்த ஒருவர் அவருக்குப்போய்ச் சொல்வாரென்கிற நிச்சயம் யா
து? சப்தபேதங்கள், அவயவக்குறிப்புகள்முதலியவிஷயங்களிலே இ
ன்சொல் ஒன்றே வன்சொல்லாகத்தோற்றுதல்கூடும். ஆகையால் நா
ம் ஒருவரிடத்தில் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது மற்றொரு
வரைப்பற்றி மறந்தும் குறைவாக ஒருஅசையையும் சொல்லுதல் கூ
டாது. அப்படிசொல்வது புறங்கூறுதலென்னுங் குற்றமாகும்.

> "அறங்கூறானல்லசெயினுமொருவன்
> புறங்கூறானென்றலினிது."

ஒருவன் தர்மத்தைச் செய்யாதவனாய்ப் பாபங்களைச்செய்வானாயினு
ம் புறங்கூறாதவனென்று உலகத்தார் சொல்லும்படி நடந்துகொள்
வது நல்லதென்று பொருள்படத்தெய்வப்புலவரும் கூறியிருக்கின்
றனர்.

ஒருவர் நம்மை நேரில் இகழும்போது நாம் பொறுத்துக்கொ
ண்டிருப்பதேயல்லாமல்,நிரபராதியாயிருந்த நம்மைஇகழ்ந்த இவன்ம
று உலகத்தில் நரகத் துன்பத்திற்காளாவானே யென்று பெரியோர்
பரிதபிப்பார் என்னும் பொருள்பட,

> "தம்மையிகழ்ந்தமைதாம்பொறுப்பதன்றிமற்
> றெம்மையிகழ்ந்தவினைப்பயத்தா-லும்மை
> யெரிவாய்நிரயத்துவீழ்வர்கொலென்று
> பரிவதூஉஞ்சான்றோர்கடன்."

எனக்கூறிய நீதிசாஸ்திரமே,

"தம்மையிகழ்வாரைத்தாமரிவன்முன்னிகழ்க
வென்னையவரொடுபட்டது-புன்னை
விறற்பூங்கமழ்கானல்வீங்குநீர்ச்சேர்ப்ப
வுறற்பாலயார்க்குமுறும்."

நம்மை இகழ்கின்றவர்களை நாம் அவர்கள்முன்னே திட்டிவிடவேண்டும், அவரால்நமக்காவதென்ன? வருவதுவந்தேதீரும் என்றுகூறியிருக்கிறது. இவ்விரண்டுசெய்யுட்களாலும் நாம் அறியவேண்டுவது யாதெனில், நம்மைஇகழ்வாரை நாம்பொறுக்கவேண்டியதென்பதும், அப்படிபொறுக்க முடியாவிடில் நேரில்இகழலாமென்பதும், புறங்கூறுதல் மாத்திரம் எவ்வளவுங்கூடாதென்பதுமேயாம். ஒருபொருளைத்திருடிவிற்போன் எவ்வளவு அபராதியாகின்றானோ அவ்வளவுக்கு அதைத்தெரிந்துவாங்குவோனும் அபராதியாவதுபோல் புறங்கூறுபவனைப்போலவே புறங்கூறுதலைக் காதுக்கினிமையாகக் கேட்டுக்கொண்டிருப்பவனும் அபராதியாகின்றான்.

6. சிலர் பிறரிடத்தில் சம்பாஷிக்கும்போது மற்றவர்களைப்பற்றிப்பேசநேரிடுமானால் அவர்களைப்போலவே அபிநயித்துப்பேசுவது வழக்கம். இதுவும் துர்வழக்கமேயாம். அவ்வாறு அபிநயிப்பது நல்லதாயிருக்கினும் கெட்டதாயிருக்கினும் அதுவும் புறங்கூறுதலுக்கு நிகரேயாம். அவ்வகையான அபிநயங்களைப்பார்த்து மகிழ்வோர்கேவலம் கீழ்மக்களேயன்றிப் பெருந்தன்மை யுடையவராகார். ஆகையால் நாம் சம்பாஷிக்கும்போது யாரைக்குறித்துப்பேச நேரிடுகிறதோ அவரைப்போல் அபிநயித்தல்எவ்வளவுங்கூடாது. சம்பாஷணையைப்பற்றிய இந்த ஆறு விதிகளையும் கவனித்தல் ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியம்.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**விசித்திரமான ஒருமரம்.**—அமெரிகாகாண்டத்திலுள்ள நியூகிரானடா என்னும்தேசத்திலே ஓர்விதமரம் இருக்கிறது. எவ்வித முயற்சியுமின்றி அதன் சாரத்தை எழுதுவதற்கு நாம் மையாக உபயோகிக்கலாம். முதலில் எழுதிக்கொண்டுபோகும்போது எழுத்துக்கள் சிவப்பாகத்தோன்றிடினும் சிறிது நேரத்திற்குள் நன்றாய்க் கறுத்துவிடுகின்றன. இந்த மையினால் எழுதப்பட்ட காகிதத்தை ஜலத்தில் பன்முறை தோய்த்தாலும் காகிதங் கிழியுமேயன்றி எழுத்துக்கள் எவ்வளவும் மறையமாட்டா.

**ஜனத்தொகையெடுக்கும்வேலை.**—இவ்வேலை பத்துவருஷத்திற்கொருதரம் நமது துரைத்தனத்தாரால் செய்யப்படுகிறபடியால்அடுத்த1891௵ அது மீண்டும் தொடங்கப்படும். முன் தடவையைவிட இப்போது ஒவ்வொரு ஜாதியையுஞ்சேர்ந்த பற்பல உட்பிரிவுகளையும் அதிகவிவரமாய்க்கண்டு மிகவும் விரிவாய்க் கணக்கெடுப்பதாக நிச்சயித்திருக்கிறார்கள். அவ்வவ்வீட்டார் இரவில் தத்தம் வீடுகளில்வந்து தங்குவார்களென்றெண்ணி இந்தத்தடவை இராக்

காலங்களிலேயே பெரும்பாலும் கணக்கெடுக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**தேகப்பயிற்சி.**— செல்வர்களாயிருக்கும் அனேகர் நம் ஊரில் நடந்து போதல், வேலைசெய்தல்முதலியவைகளை தம்முடைய கௌரவத்திற்குத் தகாதகாரியங்களெனக் கருதித் தேகப்பயிற்சியை முற்றும் அலட்சியஞ்செய்கிறார்கள். அவர்கள் உட்கொள்ளும் உணவு மிகவும் கொழுப்பைத் தரத்தக்கதானபடியால் தேகப்பயிற்சியற்றவிடத்து அது அவர்களுக்கு வீணே ஸ்தூலதேகத்தை யுண்டாக்கிக் கொழுப்பை அபிவிர்த்திசெய்கிறது. ஐரோப்பாவிலே இவ்வாறிருந்த ஒரு கல்விமானுக்கு இரணவைத்தியரொருவர் மயக்க நித்திரை வருவித்து அவர் சருமத்திற்கும் சதைக்கும் இடையில் அனுவசியமாயிருந்த $4\frac{1}{2}$ பவுன் கொழுப்பை அறுத்தெடுத்துவிட்டார். பிறகு அக்கல்விமான் சுலபமாய் நடக்கவும் வேலைசெய்யவுங் கூடியவரானார். ஸ்தூலதேகிகளாகி எவ்விதவேலையுஞ் செய்யக்கூடாதவர்களாயிருக்கும் அனேக செல்வந்தர்கள் இதைக் கவனிப்பாராக.

**பரோபகாரம்.**—இங்க்லாண்டில் பரோபகார சிந்தையுள்ள சிலகனவான்கள் தாம் மரித்தபிறகு தேகதத்துவ லட்சணத்தை யறிந்துகொள்ள விருப்பமுடைய வித்தியார்த்திகளுக்கும் ஏனையோர்க்கும் உபயோகமாகும்படி தம்முடைய பிரேதத்தை வைத்தியசாஸ்திர வித்தியாசாலைகளுக்குத் தம்முடைய பந்துக்கள் கொடுக்கவேண்டுமென்று மரணசாசனம் எழுதிவைக்கின்றார்கள். நம்முடைய பந்துக்களில் யாருக்காவது அகாலமரணம் நேரிடுமாயின் அபமிருத்துவிசாரணை உத்தியோகஸ்தர் அவர்களுடைய தேகத்தைச்சோதித்துப்பார்ப்பதே எவ்வளவும் சம்மதமிராத நம்தேசத்தாருக்கு மேலே ஆங்கிலேய கனவான்கள் செய்யுங்காரியம் வியப்பன்றோ?

**கொள்ளிவாய்ப்பேய்**—மசானத்தில் இராக்காலங்களிலே இங்குமங்கும் இடையொன்று தோன்றும் நெருப்புச்சுவாலைகளைச் சாதாரண ஜனங்கள் கொள்ளிவாய்ப் பேயென்று பயப்படுகிறார்களல்லவா? பூமியில் புதைக்கப்பட்டுள்ள பிரேதங்களின் எலும்புகள் நாளாவர்த்தியில் கையகைய அவைகளின் பௌதிகப்பொருள்களுக்குள் ஒன்றாகிய (Phosphorus) ஓர்வகை நிபாக்கினி பூமிக்குமேலே வரும்போது அது நிர்மலவாயுவிலுள்ள (Oxygen) பிராணவாயுவுடன் கலக்குகையில் நெருப்புக்குச்சைக் கிழித்தமாத்திரத்தில் அக்கினி தோன்றுவதுபோலவே நெருப்புச்சுவாலைகள் தோன்றுகின்றனவென்று பூதத்துவசாஸ்திரிகள் கண்டறிந்தார்கள்.

**புதையல்.**—ஐரோப்பாவிலுள்ள ஜேர்மேனி என்னும்தேசத்தில் பான் என்னும் ஒருபட்டணத்திலே 1000 வெள்ளிநாணயங்கள் வைக்கப்பட்டிருந்த பானையொன்று பூமியில் அகப்பட்டதாம். இதனால் இத்தேசத்திலேயன்றி ஐரோப்பாமுதலிய இடங்களிலேயும் திரவியத்தைப் பூமியில் புதைத்துவைக்கிறவழக்கம் நெடுநாளாயிருக்கிறதென்று தெரியவருகிறது.

**ஓர் பெரிய ஏரி.**—நசளாவர்த்தியில் இயற்கையாயுண்டாகும் ஏரிகளாயிராமல் ஊராருடைய முயற்சியினால் வெட்டி எடுக்கப்படும் ஏரிகளுக்குள்ளெல்லாம் வட இந்தியா[illegible] என்னும் ஏரி மிகப்பெரியதாம். அது இருபத்தொரு சதுரமைல் விஸ்தீரணங்கொண்டது. இக்கரையி லிருந்துபார்த்தால் அக்கரை தெரியாமல் அது சமுத்திரம்போலவே இருக்கிறது.

PRINTED AT THE ALBINION PRESS—MADRAS.